www.akaram.eu

# AKARAM
# அகரம்

இலவச தமிழ் மாத இதழ்

சுவடி : 8.12 திருவள்ளுவர் ஆண்டு 2051

14.11.2020 - 13.12.2020

ISSN : 2195-6480

FREE Magazine

## மாவீரர் வழிபாடு







## ஈழத் தமிழர்கள் சிறுபான்மையினர் அல்ல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

FREE CIRCULATION : GERMANY, SWITZERLAND, FRANCE, ENGLAND, DENMARK, NORWAY, HOLLAND, SWEDEN, ITALY, CANADA



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

AKARAM
# அகரம்

மாதாந்த இதழ் Monthly Magazine

14 - கார்த்திகை 2020 13 - மார்கழி 2020
சுவடி / ISSUE 8.12

**தலைமை ஆசிரியர்**
திரு. த. இரவீந்திரன்

**உதவி ஆசிரியர்**
திரு. வன்னித்தம்பி

**ஆசிரியர் குழு**
திரு. பவித்திரன் (இலங்கை)
திரு. தயாபரன் (இலங்கை)
திரு. வண்ணை தெய்வம் (பிரான்ஸ்)
திரு. எதிர்மன்ன சிங்கம் (சுவிஸ்)
திரு. சண் தவராஜா (சுவிஸ்)
திரு. அறிவழகன் (ஜெர்மனி)

**நிழற்படப் பிரிவு**
திரு. வியாசன்
செல்வி. கயல்விழி

**ஒப்பு நோக்குனர்**
திரு. அர்ஜுன் (ஜெர்மனி)

**தொடர்புகளுக்கு**

European Tamils Union e.V.
PO. BOX 4153, 59037 Hamm
Germany

Tel: 00 49 176 47 11 87 11

Email: editor@akaram.eu

ISSN 2195-6480

www.akaram.eu

No part of this publication may be reproduced, copied or transited in any form or by any means or stored in any information storage or retrieval system without the publisher's written permission.

©ETU e.V. 2014.
All rights reserved.

## நுழைவாயில்...

**அகரம் வாசக அன்பர்களுக்கும், விளம்பரதார வள்ளல் பெருமக்களுக்கும் பணிவான வணக்கம்.**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பையும், ஈழத் தமிழ் மக்களையும் நிர்மூலப்படுத்தி, பதினொரு ஆண்டுகள் கழிந்து விட்டன. உலகநாடுகளும் அமைதி ஏற்படுத்த வந்த நாடுகளின் வாக்குறுதிகளை நம்பி, ஏமாந்ததாகக் கூறிவரும் தமிழ் அரசியல் தலைவர்களும், சிங்கள ஆட்சியாளரால் ஏமாற்றப்பட்டதாக இன்னமும் சொல்ல மறுப்பது ஏன்?

இதுதான் துரோகத்தின் உச்சம். தமிழின அழிப்பு இன்னமும் தொடருகிறது. அதைப்பற்றி எதுவும் பேச மறுப்பதும், மக்களை ஏமாற்ற ஏதாவது சாட்டுச் சொல்லிச் சமாதானப்படுத்தும் நொண்டி அரசிலை செய்பவர்களால் எதுவும் ஆகப் போவதில்லை என அகரம்; 2010 தொடக்கம் பேசி வருகிறது.

மக்களின் வாக்கைப் பெற்றுப் பதவிகளை அனுபவித்துவரும் இவர்களுக்கு உதவிய புலிகள் தலைமையையும், மாவீரர் நாளையும் நினைத்தும் பார்க்காத இவர்களுக்கு, இன்னமும் மக்கள் ஆதரவு உள்ளது என்கிற மாயத் தோற்றத்தைத் தேர்தல் வாக்கெடுப்புகளில் மோசடி செய்து, வெற்றியாளர்களாகக் காட்டும் அரச அதிகாரிகளும், இந்திய அரசின் செல்வாக்கும் சுமந்திரன்களையும், மாவைகளையும் உருவாக்கித் தமிழ்த்தேசிய அரசியலைத் தலைதூக்க விடாமல் செய்வதைக் காண்கிறோம்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



தமிழ்த்தேசிய அரசியலை முன்னெடுப்பவர்களும் ஆளுக்கு ஒருவர் எனப் பிரிந்து நின்று, வலுவற்ற கல்லில் ஒப்பாரி வைப்பதையே பாராளுமன்ற உரைகளில் காண்கிறோம். ஈழத்தமிழர் உரிமைப் போரை வழிப்படுத்த எமது எந்த ஆண் அரசியல் வாதியாலும் முடியாது என்கிறப் புரிதலைக் கடந்த கால மக்கள் அரசியல் போராட்டங்கள் காட்டுகின்றன.

தமிழ் மக்கள் தொடர்பான ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்கள் அனைத்துமே தமிழ்ப் பெண்களால் பல வருடங்களாகத் தொடர்ச்சியாக நடத்தப்படுவதை, அகரம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. அதனால் பல காலமாக தமிழ்மக்களின் அரசியல் தலைமை பெண்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கூறியும் வந்துள்ளோம். ஆனால், கெடு வாய்ப்பாக அனந்தி சசிதரனைக் கூட சரியான வழியில் பயன்படுத்தத் தமிழ் மக்களின் அரசியல் களம் தவறி வருவதையே காணமுடிகிறது.

முறைப்படி வெற்றிகரமாகத் தெரிவாகிய திருமதி ரவிராஜின் தெரிவு கூட பறிக்கப்பட்டப் பரிதாபம் சென்ற தேர்தலில் நிகழ்ந்தது. முன்னர் இத்தகையக் கொடுமை அனந்திக்கும் ஏற்பட்டதாகச் செய்திகள் வெளியாயின. இலங்கை அரசியலில் சிறிமாவோ, அவரது மகள் சந்திரிகா பெண்களாக இருந்தும், ஆண்கள் யாரும் செய்ய முடியாத துணிச்சலுடன் தமிழினத்தை அடக்கி, அழிப்பதில் தீவிரம் காட்டியதால் இன்று முழுத் தமிழினமே சிங்களத்தின் கொத்தடிமைகளாகும் நிலைக்கு உள்ளாகிவிட்டது.

இந்த நிலையிலிருந்து மீளவேண்டும் என்றால், எங்கள் பெண்களால் தான் சாத்தியமாகும் என்கிற முடிவக்கு நாம் வரவேண்டும். உலகில் பல நாடுகளில் சிறப்பான ஆட்சியைப் பெண்களே கொடுத்தார்கள் என்பதற்கு வெற்றி பெற்ற நாடுகளான இஸ்ரவேல், இந்தியா, இங்கிலாந்து, யேர்மனி நாடுகளில் இடம்பெற்ற பெண்களின் ஆட்சிகள் ஆதாரமாக உள்ளன. இன்று அமெரிக்காவில் ஒரு இந்தியா வம்சா வழியான கமலா கரிஸ் துணை ஜனாதிபதியாகத் தெரிவாகி உள்ளார். வெகுவிரைவில் அவரே ஜனாதிபதியாகும் வாய்ப்பும் உள்ளது.

2009ல் தமிழருக்கான அரசியல் தீர்வும், இனங்களுக்குள் நல்லிணக்கமும் ஏற்படுத்தப்படும் என சிங்கள அரசு கொடுத்த வாக்குறுதி இன்றுவரை நிறைவேற்றப் படவில்லை. இனிமேலும் நிறைவுறக் கூடிய அனைத்துச் சாத்தியப் பாடுகளும் அறவே காணப்படாத களநிலையே உள்ளது. அதைப் பற்றிய பேச்சுக்களைபேசுவார் யாரும் இல்லை.

ஆனால், தமிழரின் நிலப்பறிப்பும், கோயில் பிரகாரங்களில் புத்தர் சிலைகளும், கோயில்களும் மிகப்பெரும் கலாச்சார ஆக்கிரமிப்பை செய்து வருகின்றன. நிலங்களைப் பறிகொடுத்த தமிழ் மக்கள் நடு வீதிகளிலும், இந்திய அகதிகள் சிறப்புத் தடை முகாம்களிலும் வானமே கூரையாகக் கடந்த 37 ஆண்டுகளாக அவதிப்படுவதை யாருமே கவனத்தில் கொள்ளவதாக இல்லை.

ஆனால் தேர்தல்களும், வாக்கு வேட்டையும் வாக்குத்திருட்டுகளின் மூலம் பதவி வேட்டைகளும், ஜனநாயகத்தின் பெயரால் அரங்கேற்றப் படுகின்றன. இந்த நிலையை மாற்ற இந்த மாதம் நாம் நினைவு கொள்ளப் போகும் மாவீரர் நாளின் பிரகடனம் வழி செய்ய வேண்டும் என அகரம் கேட்டுக்கொள்கிறது.

**அன்புடன் அனைவரின்**
**உடல் நலமும் வேண்டி விடைபெறும்...**

**ஆசிரியர், அகரம் குழுமம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பூமிபுத்திரன்

# டொனால்ட் ட்ரம்பைப் பாராட்டுவோம்

**உலக அரங்கில் அதிகக் கவனத்தை ஈர்க்கும் ஓர் தேர்தல் என்றால், அது அமெரிக்க அரசுத் தலைவர் தேர்தலே!. சொந்த நாட்டில் நடக்கும் தேர்தல்களை விடவும், அதிக சிரத்தையோடு அமெரிக்கத் தேர்தலை அவதானிப்போர் உலகில் அதிகம்.**

அமெரிக்கத் தேர்தலே உலகின் தலைவிதியைத் தீர்மானிப்பது போலவும், அங்கே நடக்கும் ஓர் அரசியல் மாற்றம் உலகின் கோடியில் உள்ள ஒரு குடிசையிலே கூடத் தாக்கத்தை ஏற்படுத்தும் எனவும் நம்புபவர்கள் எம் மத்தியிலே ஏராளம். இத்தகையச் சிந்தனை எதனால் உருவானது? என்ற கேள்விக்கு விடை தருதல் கடினமே!. ஆனால், பன்னாட்டு பகாசுர ஊடக நிறுவனங்களுக்கு இத்தகைய சிந்தனையை உலக மக்கள் மத்தியில் உருவாக்கியதில் மிகப் பாரிய பங்கு உள்ளது என்பது மாத்திரம் உண்மை.

“உலகில் சூரியன் மறையாத சாம்ராச்சியம்” ஒன்று இருந்ததைப் பற்றி நாம் அனைவரும் அறிவோம். வீர பாண்டிய கட்டப்பொம்மன் படத்தில் கட்டப் பொம்மனோடு பேசும் வெள்ளைக்காரத் துரை “சூரியன் கூட எங்களைக் கேட்டுத் தான் எழும், விழும்” என வசனம் பேசியிருப்பார். அத்தகைய வல்லமை பொருந்தியிருந்த, மாட்சிமை மிக்க மகாராணியாரின் ஆட்சியின் கீழுள்ள பிரித்தானியாவின் இன்றைய நிலையை “பிரெக்சிற்” எனப்படுகின்ற ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து வெளியேறும் காலகட்டத்தில் எம்மால் தெளிவாகப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது. பிரித்தானியாவோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணைந்து இருக்கும் ஸ்கொட்லாந்து, வேல்ஸ் போன்றவை தனிநாடாகப் பிரிந்து செல்வதற்கு முண்டியடித்துக் கொண்டு நிற்கின்றன. அதனைத் தடுத்து விடுவதற்கே ஐக்கிய இராச்சிய அரசாங்கத்தால் முடியாமல் இருக்கின்றது.

"உலகக் காவல்காரன்" என வர்ணிக்கப்படும் அமெரிக்காவின் நிலையும் இதுவே என்பதை அண்மையில் நடைபெற்று முடிந்த அமெரிக்க அரசுத் தலைவர் தேர்தல் உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியிருக்கின்றது. மூன்றாம் உலகைச் சேர்ந்த நாட்டுப் பின்னணியைக் கொண்ட எம் போன்றோருக்குத் தேர்தல் மோசடிகள் பற்றி நன்றாகத் தெரியும்.

வாக்குச் சாவடிக்கு மக்கள் வந்து வாக்களிக்காமலேயே, அதிகப்படியான வாக்குகளைப் பெற்றுத் தேர்தலில் வெல்லும் தந்திரத்தை நாம் பல தடவை பார்த்திருக்கிறோம். வாக்காளர்களின் எண்ணிக்கையை விடவும், அதிக வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்ற வேட்பாளர்கள் கூட எம்மிடையே இருந்திருக்கிறார்கள்.

ஆனால், முதல் தடவையாக அல்லது நாம் அறியும் வரையில் முதல் முறையாக, அமெரிக்க அரசுத் தலைவர் தேர்தலில் இது போன்ற மோசடிக் குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. நீதிமன்றத்தில் வழக்குகள் தொடுக்கப் பட்டுள்ளன. ஜனநாயகத்தின் தொட்டில் எனத் தன்னைத்தானே அழைத்துக் கொள்ளும் அமெரிக்கா, ஜனநாயகத்தை உலக நாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யும்(?) அமெரிக்கா, மனித உரிமைகள் பற்றி மணிக்கணக்காக வகுப்பெடுக்கும் அமெரிக்கா இன்று அம்பலப்பட்டு நிற்கின்றது.

உலக நாடுகளில் கடந்த காலங்களில் அமெரிக்கா நிகழ்த்திய கொடுமைகளுக்கெல்லாம் பிரதிபலனாக இத்தகைய அவலம் தேவையானதே என நினைத்து நாம் மகிழ்ச்சி கொள்வதா? அல்லது உலகின் வல்லமை மிக்க நாடொன்றில் இதுபோன்ற முறைகேடு நடைபெறுகின்றதே! என நினைத்துக் கவலை கொள்வதா?

தேர்தல் நடைபெற்று முடிந்து ஒரு வாரம் கழிந்த பின்னரும் இந்தக் கட்டுரை எழுதப்படும் நேரம் வரை, உத்தியோகப்பூர்வ முடிவுகள் வெளியிடப் படவில்லை. அவ்வாறு உத்தியோகப் பூர்வமான முடிவுகள் வெளியிடப்பட இன்னும் எவ்வளவு காலம் எடுக்கும் என்பதுவும் கூட சரியாகத் தெரியவர வில்லை. ஊடகத் தகவல்களின் படி வெற்றிபெற்ற ஜோ பைடன் எதிர்வரும் யனவரி 20 நண்பகலில் புதிய அரசுத் தலைவராகப் பதவியேற்க வேண்டும். அதற்கு தற்போதைய அரசுத் தலைவர் டொனால்ட் ட்ரம்ப் வழிசமைத்துத் தரவேண்டும். இவை யாவும் சுமுகமாக நடைபெற வேண்டும்.

அவ்வாறு நடக்குமா? என்பது முதல் கேள்வி. "தான் தேர்தலில் தோல்வியடைய வில்லை, தோற்கடிக்கப் பட்டேன்" என்கிறார் ட்ரம்ப். "ஆதாரமில்லாமல் அவர் அவ்வாறு கூறுகிறார்" என்கிறது எதிர்த் தரப்பு.

ஆட்சிக் கதிரையில் அமர்ந்திருக்கும் ஒருவர் உரையாற்றிக் கொண்டிருக்கையிலேயே பாதியில் எழுந்து செல்கின்றன ஊடகங்கள், சர்வ வல்லமை பொருந்திய ஒரு ஆட்சியாளருக்கு இவ்வாறெல்லாம் நடக்குமா? என்பதைக் கற்பனை செய்து கூடப் பாரக்க முடியாதவர்கள் நாங்கள். தனது மனைவி கட்டைக் காற் சட்டையுடன் ரென்னிஸ் விளையாடிய நிழற்படத்தை ஊடகத்தில் வெளியிட்டார் என்பதற்காக ஒரு ஊடகவியலாளரையே கொலை செய்த அரசியற் தலைவரைப் பார்த்தவர்கள் நாம். எனவே, அமெரிக்க அரசுத் தலைவரின் வல்லமை இவ்வளவுதானா? எனச் சிந்திப்பது முறையே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பொழுது பெரிதும் எதிர்பார்க்கப் படும் விடயம் ட்ரம்ப் என்ன செய்யப் போகின்றார்? என்பதே. அமெரிக்க தேர்தல் முடிவுகளாலும், அதன் பின்னான விடயங்களாலும் கொந்தளித்துப் போயுள்ள நிலையில், எதுவுமே நடவாதது போல் கோல்ப் விளையாடிக் கொண்டிருக்கிறார் ட்ரம்ப். அத்தோடு, தனது பாதுகாப்பு அமைச்சரான மார்க் எஸ்பரை பதவியை விட்டுத் தூக்கியிருக்கின்றார்.

நாட்டில் தொடர்ச்சியாக நடை பெற்று வரும் மக்கள் ஆர்ப்பாட்டங்களை அடக்குவதற்கு இராணுவத்தினரைப் பயன்படுத்த அவர் மறுத்தார் என்பதே அவர் மீதான குற்றச்சாட்டாக உள்ளது. உண்மை அதுதானா? அல்லது எதிர்காலத்தில் தான் மேற்கொள்ளப் போகும் நடவடிக்கைகளுக்கு ஆதரவான ஒருவரை அந்தக் கதிரையில் அமர்த்துவதற்கு ட்ரம்ப் விரும்புகின்றாரா? என்பது போகப் போகத்தான் தெரியும்.

மறுபுறம், சட்டமா அதிபர் வில்லியம் பார் அனைத்துச் சட்டத்தரணிகளுக்கும் அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில், தேர்தலில் ஏதாவது வாக்கு மோசடிகள் இடம்பெற்றுள்ளனவா? என்பது பற்றி விசாரிக்குமாறு கேட்டுள்ளார். அமெரிக்காவின் பிரதான ஊடகங்களும், ஜோ பைடன் தரப்பும், ட்ரம்ப் முன்வைக்கும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை எனச் சொல்லிக் கொண்டிருக்க, தனது குற்றச் சாட்டுக்கு ஆதாரத்தைத் தேடும் முயற்சியில் ட்ரம்ப் ஈடுபட்டுள்ளார் என்பதை அவரது நடவடிக்கைகள் காட்டி நிற்கின்றன.

உலகெங்கும் உண்மையான ஜனநாயகத்தை ஆதரிக்கின்ற சக்திகள் மற்றும் முற்போக்காளர்கள் அனைவரும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் போலியான முகத்திரையைக் கிழித்து, அதன் உண்மைச் சொரூபத்தை அம்பலப்படுத்த படாத பாடுபட்டு வருகின்றார்கள். ட்ரம்ப் போகின்ற பாதையைப் பார்க்கும்போது அவர்களின் எதிர்பார்ப்பு கிட்டிய அண்மைக் காலத்தில் சுலபமாக நிறைவேறுவதற்கான வாய்ப்பு உள்ளதைப் போன்றே தென்படுகின்றது. உலக மக்கள் அனைவருக்கும் எதிரான போக்கைக் கொண்டுள்ள அமெரிக்க ஆளும் வர்க்கத்தின் உண்மை முகத்தை உலகிற்கு வெளிச்சம் போட்டுக் காட்ட வழிசமைத்த ட்ரம்ப் அவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.


THOOYA COMMUNICATION






Rheinische Str 80
44137 Dortmund




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஐரோப்பிய நாடுகளில் இன்று தமிழர்கள் மத்தியில் அதிக அளவிலாக நடைபெறுகின்ற மரணங்களை ஆரம்பத்தில் இருந்து ஆராய்கின்றது இந்தக் கட்டுரை. இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ள சம்பவங்கள் அனைத்தும் உண்மையே! நாடுகளின் பெயரும், சம்பத்தப்பட்டவர்களின் பெயரும் மாற்றப்பட்டிருக்கின்றது.**

ஐரோப்பிய நாடொன்றிற்குச் செல்ல வேண்டும் என்பதுதான் அவர்களின் ஒரே குறிக்கோள்! அதற்காக குடியிருந்த வீட்டை, காணியை, வித்தோ... அடகு வைத்தோ தங்கள் பிள்ளைகளை வலுக்கட்டாயமாக நாடு கடத்திய பெற்றோர்கள்தான் எங்கள் நாட்டில் அதிகம்!

அப்படியாக வெளிநாடுகள் சென்ற இளைஞர்கள் எவ்வளவு காலத்திற்குத்தான் உழைப்பதும், உண்டு உறங்குவதுமாக தனிமையில் வாழ்வது? சொந்த நாட்டில் என்றால் மாமன் பொண்ணு... பக்கத்து வீட்டுப் பொண்ணு.... தள்ளிப் போனால் பக்கத்து அயல் பொண்ணு.... இப்படியாக டாவடித்தாவது தங்கள் வாலிபத்து ஆசைகளைத் தீர்த்துக் கொண்டவர்களுக்கு அப்படியான வாய்ப்புகள் வெளிநாடுகளில் கிடைப்பதில்லை!

வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்ட இளைஞர்கள் உழைப்பதற்காகவே அனுப்பப்பட்டார்கள். ஆனால், இளம் பெண்களின் நிலை அப்படியானது அல்ல! இவர்கள் அனுப்பப்படும் போதே இன்னாருக்கு என நிச்சயம் செய்யப்பட்டு, மணமகளாகவே அனுப்பப் படுகின்றார்கள்!

வெளிநாடு என்ற பெரும் கனவோடு மகிழ்ச்சியாக விமானம் ஏறி, வந்து வாழ்ந்து கொண்டிருக்கும் அனைத்துப் பெண்களும் சந்தோசமாகவே வாழ்கின்றார்கள் என்று சொல்லிவிட முடியாது! இப்படியாக திருமணத்திற்காகவே வரும் பெண்களின் பிரதானமான இலட்சியம் லண்டனோ, பாரீசோ போக வேண்டும் என்பதுதான்! இங்கு வந்ததன் பின்னர்தான் தங்களுடைய சின்ன ஆசைக்காக தங்களின் வாழ்வையே தானமாகக் கொடுத்து விட்டோமே என்ற உண்மை!. இதற்குச் சில உதாரணங்கள்!

# வெளிநாட்டு அவலங்கள்!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அவலம் :-1

தனக்கு வரப்போகும் கணவர் லண்டனில் ஒரு பெரிய நிறுவனத்தில் கம்பியூட்டர் இன்ஜீனியராக இருக்கின்றார் என்ற கனவோடு தான் இருபத்தையாயிரம் ரூபா சம்பளத்தில் வேலை செய்த ஆசிரியப் பணியையையும் தூக்கி எறிந்துவிட்டு, லண்டன் வருகின்றாள் ஒரு பட்டதாரி ஆசிரியை. லண்டனில் விமான நிலையத்திலேயே முதல் ஏமாற்றம்! தனக்கு புகைப்படத்தில் காட்டிய கணவனின் தோற்றத்திற்கும், அவள் நேரில் பார்க்கும் கணவரின் தோற்றத்திற்கும் உள்ள மாற்றம்!

தோற்றத்தில் என்ன இருக்கின்றது? தன்னுடைய படிப்புக்கு ஏற்ற விதத்தில், தனக்கு ஒரு படித்த கணவர் கிடைத்திருக்கின்றார் என்று மனதை தேற்றிக் கொண்டவளுக்கு இடியென வந்தது இரண்டாவது ஏமாற்றம்! ஆம்! அவளுக்கு சொல்லப்பட்டது போல அவளின் கணவர் ஒன்றும் கம்பியூட்டர் இன்ஜீனியர் இல்லை! காலையில் ஒரு அலுவலகத்தைச் சுத்தம் செய்யும் வேலை! மாலையில் ஒரு பெற்றோல் பங் நிலையத்திலும் வேலை!

தன்னுடைய வெளிநாட்டு மோகம்! அதனால் லண்டன் மாப்பிள்ளை என்றவுடன் தீர விசாரிக்காமல் எடுத்த முடிவு! ஒரு கட்டாயமான வாழ்வை வாழ்கின்றாள் அந்தப் பெண்!.

இதேபோல இன்னொரு பெண். தனக்கு திருமணம் பேசப்பட்டவர் விமான நிலையத்தில் வேலை செய்பவர் எனக் கூறப்பட்டது. விமான நிலையம் என்றதும் அந்தப் பெண் குறைந்த பட்சம் பயணிகளை ஒழுங்கு படுத்தும் வேலையிலாவது இருக்கக் கூடும் என்றுதான் எண்ணியிருந்தாள். ஆனால், அவரோ விமான நிலையத்தைச் சுத்தரிப்பு செய்யும் ஒரு








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதாரண தொழிலாளிதான்! என்றதும் மனம் உடைந்து போகின்றாள்.

தாய் நாட்டில் நல்ல சம்பளத்தில்... உயர்ந்த பதவியில் வேலை பார்த்த அந்தப் பெண், இப்பொழுது கணவனுடனேயே தானும் ஒரு தொழிலாளியாக விமான நிலையத்தில் வேலை செய்கின்றாள்.

**அவலம் :-2**

அந்தத் தாய்க்கு ஐந்து ஆண் பிள்ளைகள். ஐந்து பேரும் லண்டனிலும், பாரிசிலுமாக வெளிநாட்டில் வாழ்கின்றார்கள். வெளிநாட்டு மாப்பிள்ளை என்றால் சொல்லவா வேண்டும்! முதல் நான்கு பிள்ளைகளுக்கும் நல்ல வசதியான இடத்தில் கொழுத்த சீதனத்துடன் திருமணத்தை நடாத்தி வைத்த அந்த தாய்க்கு, ஐந்தாவது மகன் பாரீசில் வாழ்ந்தாலும் அவனுக்கு திருமணம் செய்வதில் மட்டும் சிரமமாக இருந்தது! காரணம் ஊரிலேயே அவன் வருத்தக்காரன்! அடிக்கடி வலி வரும். ஐரோப்பிய நாட்டில் குணமாக்கி விடலாம் என்ற நம்பிக்கையில் பாரீசிற்கு அனுப்பி வைத்தால், வலி வருவது அங்கு கூடியதே தவிர, குறையவில்லை!

வருத்தக்காரனுக்கு பெண் கொடுப்பதற்கு பலரும் தயங்கிய நிலையில், வறுமையில் இருந்த பக்கத்து வீட்டுக் குடும்பம் ஒன்றிற்கு ஆசை வலை விரித்தார் இந்தத் தாய்!

வெளிநாடு என்பதைப் பற்றி கனவில் கூட சிந்திக்காத அந்தக் குடும்பத்தினரும், இந்த தாயின் ஆசை வார்த்தைகளுக்கு மயங்கிவிட்டனர்! மற்றய நான்கு பிள்ளைகளுக்கும் வலுவான சீதனம் வாங்கிக் கல்யாணம் செய்து வைத்த அந்த் தாய், இந்த ஐந்தாவது மகனுக்கு மனைவியாக வரும் பெண்ணுக்கு சீதனம் கொடுத்துத்தான் மருமகளாக எடுத்தார்!

ஆம்! இரண்டு பவுணில் ஒரு சங்கிலி! காதுக்குத் தோடு! அத்துடன் பாரீஸ் செல்லுகின்ற செலவு! எல்லாவற்றையும் இவர்களே ஏற்றுக் கொண்டார்கள்! இப்படியாக அந்தப் பெண் விலைக்கு வாங்கப்பட்டாலும், கணவன் வெளிநாட்டில் வாழ்கின்றார் என்ற கனவோடு பாரீஸ் வந்த அந்தப் பெண்ணுக்கு வாழ்க்கையே ஏமாற்றம்!

ஏமாற்றம் ஒன்று! கணவனுக்கு வேலையே இல்லை! அரசாங்க உதவிப் பணத்தில் தான் வாழ்கின்றார்! ஏமாற்றம் இரண்டு! வைத்தியசாலையும், வீடுமாகவே கணவரின் வாழ்க்கை நகர்கின்றது!! பெரும் கனவுகளோடு வெளிநாடு வந்த அந்தப் பேதைப் பெண் இன்று, இரண்டு பிள்ளைகளுக்குத் தாயாகி, தன் குடும்பத்தை நகர்த்துவதற்காக வீட்டிலேயே இடியப்பம், பிட்டு அவித்து அயலில் உள்ளவர்களுக்கு வித்துச் சம்பாதிக்கின்றார்!. வெளிநாட்டில் இப்படியும் ஒரு அவலம்!

**அவலம் :-3**

சாதாரண கூலித் தொழிலாளியாக இருந்து கஸ்ற்ரப்பட்டு வெளிநாடு சென்று, கடந்த ஐந்து வருடமாக பாரீஸில் வாழ்ந்து விட்டு விடுமுறையில் ஊருக்கு வந்தவர் காட்டிய பகட்டு, பரம்பரை பரம்பரையாக பணக்காரர்களாக வாழ்பவர்களையே வியப்பில் ஆழ்த்தியது!

இவரின் ஆடம்பரத்தைப் பார்த்த பல கலியாணத் தரகர்கள், பல பெண்களின் புகைப்படங்களுடனும், ஜாதகங்களுடனும் இவருக்குப் பின்னாலேயே அலைந்தார்கள். முடிவில் ஒரு வரன் தரகர் இல்லாமல் தேடி வந்தது. அவர்கள் சமூகத்தில் இந்த வெளிநாட்டு மாப்பிள்ளையைவிட கொஞ்சம் உயர்வானவர்கள். ஆனால் வசதியில்லாதவர்கள்!

வெளிநாட்டில் இருந்து வந்தாலும் குடிப்பழக்கம் இல்லாதவர், பண்பானவர் இப்படியான காரணங்களால் பெண் வீட்டார் தங்கள் சமூகத்தின் எதிர்ப்பையும் மீறி, இவரை மாப்பிள்ளையாக்கிக் கொண்டார்கள். மணமகளாகி பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்த பின்னர்தான் அந்தப் பெண்ணுக்குத் தெரிந்தது தன் கணவர் முன்பு ஒரு வெள்ளைக்காரப் பெண்ணைத் திருமணம் செய்து விவாகரத்துச் செய்தவர் என்னும் விடயம்!

“அது எப்பவோ நடந்த விசயம்” என சர்வ சாதாரணமாக அவன் சொன்னது, அந்தப் பெண்ணுக்கு மேலும் பயத்தை ஊட்டியது! காலப்போக்கில் அந்தத் தம்பதிகளுக்கு ஒரு அழகான பெண் குழந்தையைக் கொடுத்தாலும், இந்தக் காரணத்தினால் அவர்களிடையே தினம் தினம் சண்டையைத் தோற்றுவித்துக் கொண்டே இருந்தது. இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி அவளின் சமூகத்தைச் சேர்ந்த சிலர், அவனைப்பற்றி மேலும் இல்லாததும், பொல்லாததுமாக கொழுத்திப் போட... குடும்பச் சண்டை நீதிமன்றப் படியேறி அவள் விவாகரத்து கேட்கின்றாள்.

நீதிமன்றம் அந்தத் தாய்க்கு விவாகரத்து வழங்கியதோடு, குழந்தையின் எதிர் காலத்திற்காக பத்தாயிரம் யூறோக்கள் செலுத்தவேண்டும் எனத் தீர்ப்பு வழங்கியது.

“தான் விவாகரத்துக் கோரவில்லை என்றும், அவர் விரும்பினால் இப்பொழுதும் அவரையும் குழந்தையையும் சேர்த்து வாழத் தயாரக இருப்பதாகவும், அதற்கு அவர் விரும்பா விட்டால் தன்னால் குற்றப்பணம் செலுத்த முடியாது” என எதிர் வழக்காடினார்! இவரின் வாதத்தை நீதிமன்றம் ஏற்கவில்லை! “குற்றப்பணம் செலுத்தா விட்டால் இவர் வேறொரு திருமணம் செய்யக்கூடாது” எனத் தீர்ப்பளித்தது!

இப்பொழுது அவனோ இரண்டாவது விவாகரத்துப் பெற்று, தனி மரமாக நிற்கின்றான்! அவளோ தன்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணவன் முதலில் திருமணம் செய்து, தன்னை ஏமாற்றி இரண்டாவது தாரமாகத்தான் தன்னை திருமணம் செய்தான் எனக்கூறி விவாகரத்து வாங்கியவள், இன்று இரண்டாவது திருமணம் செய்து வாழ்கின்றாள்!. இவையெல்லாம் வெளிநாட்டு வாழ்க்கையின் அவலங்கள்!.

### அவலம் :-4

இந்த சம்பவம் நடந்த காலம் அண்ணளவாக 1985 இருக்கலாம்! (தமிழர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அதிகமாக வந்து கொண்டிருந்த காலம்)

இந்தக் காலத்தில் வந்த இளைஞர்கள் பலருக்கு, வேலை தேடுவதே வேலையாக இருந்த காலத்தில், சிவபாலனுக்கு மட்டும் அதிஸ்டம் கை கொடுத்தது. பிரான்ஸ் காவல் துறையின் உயரதிகாரி ஒருவரின் வீட்டில் துப்பரவுப் பணியாளராக வேலை கிடைக்கின்றது.

துப்பரவுப் பணிக்குச் சென்றவர், அங்குள்ள சமையலாளிக்கு உதவியாளராகி, காலப்போக்கில் அந்தச் சமையலாளி சுகயீன விடுப்பு எடுக்க, சிவபாலனே சமையலாளனாகின்றான். நம்ம நாட்டு கறிவேப்பிலை, சீரகத்தூள் போன்ற வாசனைத் திரவியங்களைத் தனது சமையலில் சேர்க்க, பிறகென்ன? சிவபாலனே அங்கு நிரந்தரச் சமையல்காரர் ஆகின்றார்.

சிவபாலன் சமைக்காவிட்டால் அங்கு யாருக்குமே சாப்பாடு பிடிக்காமல் போனது! இந்தக் காரணத்தால் சிவபாலன் தங்களுடனேயே இருக்க வேண்டும் என்பதற்காக, இலங்கையில் வசித்த சிவபாலனின் மனைவி பிள்ளைகளை பிரான்ஸிற்கு வரவழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுக்கின்றார் அந்த அதிகாரி. பிரான்ஸில் குடும்பமாக வாழ்கின்ற ஒரு சில குடும்பங்களில் இப்பொழுது சிவபாலனின் குடும்பமும் ஒன்று.

அன்றைய நாட்களில் ஒரு சிறிய அறையில் பல இளைஞர்கள் சேர்ந்து வாழ்வது சாதாரணமான ஒன்று! இப்படி வசிக்கும் இளைஞர்கள் எவருக்குமே சமைக்கத் தெரியாது! ஏதோ தங்களுக்குத் தெரிந்த வகையில் சமைத்து சாப்பிடுவார்கள். இப்படியான நேரத்தில் வேலையில்லாதிருந்த தனது நண்பர்களை வீட்டுக்கு அழைத்து, கிழமைக்கு ஒரு நாளாவது மனைவியின் கையால் உணவு வழங்கி திருப்திப்பட்டுக் கொள்வான் சிவபாலன்.

வெளிநாடு வந்து சாப்பாட்டின் ருசியையே மறந்து போயிருந்த அந்த இளைஞர்கள் சிவபாலனுக்கும், அவன் மனைவிக்கும் நன்றி பரிமாறிக் கொள்ளவார்கள். இப்படியாக வந்து அடிக்கடி சாப்பிட்டுச் செல்பவர்களில் சிவபாலனின் நெருங்கிய நண்பன் சந்திரனும் ஒருவன்.

சந்திரன் ஊரில் நல்ல வசதியான குடும்பத்தைச் சேர்ந்தவன். சிவபாலன் வெளிநாடு புறப்பட்ட சமயத்தில் சந்திரனும் சின்னதாக உதவியிருக்கின்றான். அதற்காக என்றில்லாமல் இயற்கையிலேயே சிவபாலனுக்கு இரக்க குணம் உள்ளதால்தான் நண்பர்களை வீட்டுக்கு அழைத்து, விருந்து பரிமாறிக் கொள்வான்.

சிவபாலனின் இந்த இரக்க குணமே அவனுக்கு எதிரியாக மாறியது! சந்திரனுக்கும், சிவபாலன் மனைவிக்கும் இரகசிய தொடர்பு ஏற்பட்டது! கர்ப்பமாக இருக்கும் சிவபாலனின்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவிஸ் நாட்டின் மாபெரும் ஜுவல்லரி சாம்ராஜ்யம்

# NS Jewellery & Textiles



தாலி மற்றும்
பொன்னுருக்குதல்,
இவையாவும் இங்கு
செய்து தரப்படும்

ஒவ்வொரு வருடமும் தைமாதம்
எமது ஸ்தாபனத்தால்
தங்கநகை
சேமிப்புத்திட்டம்
ஆரம்பிக்கப்படுகின்றது.
மாதம் 100 CHF என 12
மாதம் 1200 CHF இணைய
விரும்புவோர் உங்களது
பெயர்களை முன்கூட்டியே
பதிவு செய்யலாம்.

nfo@nsjewellery.com

Neugasse 58, 8005 Zürich, Switzerland
www.nsjewellery.com

Tel: 044 440 60 50 Fax: 044 440 60 52

StaR-Impex

ஜெர்மனிக்கான
ஆச்சி மசாலாவின்
மொத்த விநியோகஸ்தர்

## Lebensmittel Grosshandel e.K.

Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

Aachi®
The Mother of Good Taste



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவியின் வயிற்றில் இருக்கும் குழந்தைக்கு, சந்திரன்தான் தந்தையென சிவபாலன் வீட்டில் சாப்பிட்டுவிட்டுச் சென்ற சிவபாலனின் நண்பர்களே அவனின் காதுபடப் பேசினார்கள். அவமானத்தால் கூனிக் குறுகிப் போனான் சிவபாலன்.

தங்கள் மனைவிமாரை வெளிநாடுகளுக்கு அழைப்பதற்காகப் பலரும் படாத பாடுபட்டுக் கொண்டிருந்த அந்தக் காலத்தில் கர்ப்பணியான தன் மனைவியை ஊருக்கே திருப்பி அனுப்பி வைத்தான் சிவபாலன்.

"மழை நின்றாலும் ஒட்டை வீட்டில் ஒழுக்கு நிற்காது" என்பதைப் போல, மனைவி ஊருக்கு போனாலும், அந்த அவமானம் சிவபாலனின் மனதைக் குடைந்து கொண்டே இருந்தது! காலம் சிவபாலனை மதுவுக்கு அடிமையாக்கி, பாரிஸ் வீதிகளில் போவோர் வருவோரிடம் பிச்சையெடுக்கும் நிலமைக்குத் தள்ளியது. சந்திரனோ இன்று பாரிஸில் ஒரு வர்த்தக நிலையத்திற்கு முதலாளியாகி பெரிய மனுசன் போர்வையில் உலா வருகின்றான். வெளிநாட்டு அவலங்களில் இதுவும் ஒன்று!.

## அவலம் :- 5

வெளிநாடு வந்து தனது குடும்பத்திற்காகப் பத்து வருடங்களாக உழைத்து, தன் இளமையிலும், வலிமையிலும் பாதியைத் தொலைத்து விட்டுச் சிறிதாக மூச்சு விட்ட அந்த நேரத்தில் தானா தேவனுக்கு நெஞ்சுவலி வர வேண்டும்!

சென்ற வாரம்தான் தேவனுக்காக ஊரில் இருந்து மணப் பெண்ணாக வளர்மதி வந்திருந்தாள். முப்பத்தைந்து வயதிற்குப் பின் தனது திருமணத்தை ஆடம்பரமாகச் செய்ய விருப்பமில்லாததால், நெருங்கிய உறவினர்களுடன் நாளை கோவிலில் திருமணம் செய்வதற்கான ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தது. இன்று யாரோ ஒருவனுடன் ஓடிப்போய்விட்டாள் வளர்மதி!.

வந்து ஒரு வாரத்திற்குள் வேறு ஒருவனுடன் காதலா? யாராலும் நம்ப முடியவில்லை! தீர விசாரித்துப் பார்த்ததில் உண்மை தெரியவந்தது. வளர்மதிக்கும், அவளைக் கூட்டிப் போனவனுக்கும் ஊரிலேயே காதலாம்! காதலன் இருக்கும் நாட்டிலேயே அவளுக்குத் திருமணம் பேசிவர, காதலனிடம் செல்வதற்கு இது நல்ல சந்தர்ப்பம் எனக் கருதிய அந்தப் பெண், தேவனை திருமணம் செய்யவரும் மணப்பெண் என்ற முகமூடியுடன் பிரான்ஸிற்கு வந்து, இப்பொழுது தனது காதலனுடன் ஓடிவிட்டாள்!

அவமானத்துடன் வாழ்க்கையில் தோற்றுப்போய் கூனிக் குறுகி நின்றான் தேவன். தேவனின் உறவினர்களோ இதை தேவனுக்கு நடந்த அவமானமாகப் பார்க்கவில்லை! தங்களுக்கு நடந்த அவமானமாகப் பார்த்தார்கள். தேவனின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நண்பர்களும் அவனுக்குப் பக்க பலமாக நின்றார்கள்.

வளர்மதியைக் கூட்டிக்கொண்டு போன அவளுடைய காதலனுக்கு அவ்வளவாக பக்கபலம் இல்லாததால் இருபத்திநான்கு மணி நேரத்தில் வளர்மதி மீட்கப்பட்டு விட்டாள். ஓடிப் போனவளை மீட்டு வந்தாயிற்று. ஆனால், ஓடிப்போன அவமானத்தை எப்படி மீட்பது?

இப்பொழுது வளர்மதியை மணப்பதற்கு தேவனும் தயாராக இல்லை! தேவனை மணப்பதற்கு வளர்மதியும் தயாராக இல்லை. தான் தன் காதலனுடனேயே செல்வேன். இல்லையேல் தற்கொலை செய்வேன் என மிரட்டினாள் வளர்மதி! மிரட்டலுக்கு அடிபணிய தேவன் தயாராக இல்லை.

முடிவு! அடுத்தவாரம் மீண்டும் இலங்கைக்கு அனுப்பி வைக்கப்பட்டாள் வளர்மதி! எல்லோரும் வெளிநாடு வருவது தங்கள் வாழ்க்கையை வளப்படுத்த. ஆனால், தேவன் வாழ்க்கையைத் தொலைத்து விட்டு நிக்கின்றான். வெளிநாட்டு அவலங்கள் இன்னும் இருக்கின்றது!

மனைவிமேல் சந்தேகப்பட்டு வேலைக்குச் செல்லும்போது வீட்டுக்குள்ளேயே பூட்டிவைத்துவிட்டு செல்வதால் மனமுடைந்த மனைவி தற்கொலை!

பணம் சம்பாதிப்பதையே குறிக்கோளாகக் கொண்டு குடும்ப உறவில் கவனம் செலுத்தாத கணவனின் செயலைப் பொறுக்க முடியாத மனைவி, பிள்ளைகளையும் கொலை செய்து, தானும் தற்கொலை செய்து கொண்ட கொடூரம்!

உறவினர் போல மிக மிக நெருக்கமாக பழகியவர் ஒருநாள் தாயும், தகப்பனும் வேலைக்குப் போன சமயத்தில் வீட்டிற்கு வருகின்றார். "மாமா வாருங்கள்" என வீட்டில் அவர்களின் மகள் அன்பாக வரவேற்கின்றாள். அவனோ அந்தச் சிறுமியைக் கற்பழித்து விட்டு,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடூரமாகக் கொலையும் செய்துவிட்டு, வீட்டில் இருந்த விலை உயர்ந்த பொருட்களைக் கொள்ளையடித்துக் கொண்டு சென்று விடுகின்றான். விரைவாகவே கைதுசெய்த காவல்துறை அவனை நீதிமன்றத்தில் நிறுத்தி, இருபது வருட சிறைத்தண்டனையை பெற்றுக் கொடுத்தாலும், பறிக்கப்பட்டது அந்தச் சிறுமியின் உயிர்!

இப்படியாக நம் மத்தியில் இன்னும் பல நூறு பண்பாட்டுச் சீரழிவுகள் இருக்கின்றன! இப்படியான நிகழ்வுகளைப் பாரத்து ஐரோப்பியர்கள் மட்டுமல்ல, ஏனைய நாட்டவர்கள்கூட முகம் சுழிக்கின்றார்கள்! முன்பு பொதுவாக ஸ்ரீலங்கன் என்றவர்கள் இப்பொழுது விவரமாகத் தமிழர்கள் என்று சொல்கின்றார்கள்!.

### மேற்படி சம்பவங்களுக்கு காரணங்கள்தான் என்ன?

ஒன்று எமக்கு வழிகாட்டுவதற்கு உரிய தலைமுறைகள் இல்லை! இரண்டாவது ஊரில் வாழ்ந்த கூட்டுக் குடும்பமுறை இங்கு இல்லாமல் போய்விட்டது! பொதுவாகவே எமக்கு ஆலோசனைகள் வழங்க.... எம்மை வழிநடத்த.... வீடுகளில் முதியவர்கள் இல்லாமல் போய்விட்டார்கள்! இதுதான்



காரணமாக இருக்க முடியும். (முதியவர்கள் இருக்கும் வீடுகளில்கூட அவர்களின் ஆலோசனைகளை யாரும் கேட்பது மட்டுமல்ல, அவர்களை மதிப்பதுகூட இல்லை)

ஊரில் ஒரு நல்லது, கெட்டது என நடந்தால் நாலு நாட்களுக்குக் குறையாத கொண்டாட்டமாக இருக்கும். அதன் மூல காரணம் எங்கள் நன்மையிலும், தீமையிலும் நம் உறவுகள் நம்மோடு இருக்கின்றார்கள் என்பதுதான். இங்கு வெளிநாடுளில் அனேகமானவர்கள் தங்கள் இரத்த உறவுகளுடனேயே தங்கள் வாழ்க்கையை முடக்கிக்கொண்டு விட்டார்கள்! இது சிக்கனத்திற்கான நடவடிக்கை அல்ல! ஏனெனில் வெளிநாடுகளில் சின்னக்; கொண்டாட்டமோ! பெரிய கொண்டாட்டமோ! கொண்டாட்டத்தை நடத்துபவர் வசதியானவரோ! வசதியற்றவரோ! ஆடம்பரத்துக்கு மட்டும் குறையிருக்காது!






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு பக்கத்து வீட்டுக்காரனாக இருந்தாலும், உறவில்லாத இன்னொருவரோடு பழகப் பயப் படுகின்றார்கள்! குடும்பஸ்தவர்கள் குடும்பஸ்தவர்களோடே பழகிக் கொள்கின்றார்கள். இளைஞர்களை வீட்டில் சேர்க்க அச்சப்படுகின்றார்கள்! அப்படிச் சேர்த்தால் அவலங்கள் நான்கில் சொல்லப்பட்ட சிவபாலனுக்கு நேர்ந்ததைப் போல் தங்களுக்கும் வந்து விடுமோ? என பயப்படுகின்றார்கள்! அந்தப் பயத்திலும் நியாயம் இருக்கத்தான் செய்கின்றது.

வெளிநாடுகளில் சொந்தமாக வீடு வாங்குவது என்பது ஒரு மோகமாகவே மாறிவிட்டது. உழைப்பாளிகள் வீடு வாங்குவதில் நியாயம் இருக்கின்றது.

ஆனால், "மயில் தோகை விரிதாடுவதைப் பார்த்த வான் கோழியும் ஆடிப் பார்த்ததைப் போல" வங்கி கடன் கொடுக்கின்றது என்பதற்காக, கையில் இருந்த சொற்ப சேமிப்பையும் சேர்த்து, முதலீடு செய்து சொந்தமாக ஒரு வீட்டை வாங்கிவிட்டு, பின்பு வங்கிக்கு மாதாந்த தவணைப் பணம் செலுத்துவதற்காக வீட்டில் சில இளைஞர்களை தங்கவைத்து, பின்னர் வீட்டையும் இழந்து, மனைவியையும் இழந்தவர்களுக்கு ஆரம்பத்திலேயே தக்க ஆலோசனைகளையும், அறிவுரைகளையும் சொல்வதற்கு வீட்டில் நல்ல ஆசான்கள் இருந்திருந்தால் இப்படியான அவலங்கள் நடந்திருக்குமா?

இன்று வெளிநாடுகளுக்கு வந்து வாழ்கின்ற இளைஞர்கள் அறிவாளிகளாக இருக்கலாம்! ஆனால், அனுபவசாலிகள் இல்லை என்பது அவர்களின் வாழ்க்கை முறைகளில் தெரிகின்றது! ஆண், பெண் என அனைவரும் பணம் சம்பாதிப்பது மட்டும்தான் நோக்கமாக வாழ்வதால் சொந்தம், பாசம், என்பதெல்லாம் தெரியாமல் போய், இள வயதிலேயே பெரிய மனிதர்களுக்கான தோரணையில் வாழ்க்கையை நகர்த்த ஆரம்பித்ததின்

அகரம்
விளம்பரத் தொடர்புகளுக்கு
00 49 176 47 11 87 11

தொடக்கமே இப்படியான விபரிதமான சம்பவங்களுக்கெல்லாம் மூல காரணமாக அமைந்து விடுகின்றது.

"சிறுபிள்ளை வேளாண்மை வீடு வந்து சேராது!" என்று எம் முன்னோர் காலத்தில் சொல்லி வைத்த முதுமொழி இன்று எம் கண்முன் உண்மையாகி நிற்கின்றது!.

வெளிநாடுகளில் நடந்த பல மரணங்களில் விசாரணையின் பின் பொலீசார் தெரிவித்த கருத்துகள் "மன அழுத்தங்கள்தான் இப்படியான சம்பவங்களுக்குக் காரணம்" என்று.

வெளிநாடுகளுக்கு வந்த அறிவு சார்ந்த பெரியவர்கள், அனுபவசாலிகள் இன்றைக்கு இருபது வருடங்களுக்கு முன்னமே "வரும் காலத்தில் எமது சந்ததியினர் மொழி மறந்தவர்களாக மாறிவிடக் கூடாது" எனச் சிந்தித்து, தமிழ்ப் பாடசாலைகள் உருவாக்கினார்கள். ஆனால், வருங்காலத்தில் தமிழர்களின் பண்பாடு சிதைந்து போகப்போகின்றதே என யாரும் சிந்திக்கவில்லை!

நாட்டிலே சீரழிந்துபோன கல்வியை, பொருளாதாரத்தை கட்டியெழுப்ப வெளிநாடுகளில் இருந்து செயற்படும் இளைஞர்களைப் பார்க்கின்றோம். நாட்டில் உள்ளவர்கள் பணம் இல்லாததால் தான் அப்படியான இழப்பைச் சந்திக்கின்றார்கள். ஆனால், இங்கு பண வசதியோடு வாழும் நம்மவர் மத்தியில் உருவாகியிருக்கும் இந்தப் பண்பாட்டின் இழப்பை எப்படி நிவர்த்தி செய்யப் போகின்றோம்? சிந்திப்போம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சண் தவராசா**










# இதனை இதனால் இவன் முடிக்கும் என்று ஆய்ந்து...

**அறிவியல் உலகத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருந்தாலும், அறிவியலைக் கொச்சைப்படுத்தும் நபர்களும் நம்மைச் சுற்றி வாழாமல் இல்லை. கல்வி அறிவில் குறைந்தவர்கள், பாமரர்கள் புத்திக் குறைவுடன் அல்லது மூட நம்பிக்கைகளுடன் நடமாடுவதை நாம் அதிகமாகப் பார்த்திருக்கின்றோம்.**

அறிவியல் வளர்ச்சி இல்லாத காலத்தில் வாழ்ந்த மனிதனுக்கும், இன்றைய மனிதனுக்கும் வேறுபாடுகள் பல இருந்தாலும் கூட, கற்காலத்தில் வாழ்வதாகத் தங்களைக் கற்பனை செய்து கொள்வோர் இன்றும் இருக்கவே செய்கிறார்கள்.

அவர்கள் சாதாரண மட்டங்களில் இல்லாமல் அரசாங்கங்களில் உயர் மட்டங்களில் இருந்து கொண்டு செய்யும் காரியங்கள் ஒருசில அவர்களுக்கு மட்டுமன்றி, அவர்கள் பிரதிநிதித்துவம் செய்வதாகச் சொல்லப்படும் மக்களுக்கு அவமானத்தையும், தலைகுனிவையும் ஏற்படுத்தி விடுகின்றன. அத்தகைய ஒரு சம்பவத்தை சிறி லங்காவின் சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி செய்திருக்கின்றார்.

உலகெங்கும் பீதியைக் கிளப்பி, பல இலட்சக் கணக்கானோரைக் காவு கொண்டுவிட்ட கொரோனாவில் இருந்து மக்களைப் பாதுகாப்பதற்காகக் கங்கையில் தண்ணீர்க் கலசம் ஒன்றை விட்டிருக்கின்றார் அவர். ஆன்மீக முறையில் மந்திரிக்கப்பட்ட நீர் அடங்கிய குடம், ஆற்றிலே மிதந்தால் நோய் ஒழியும் என நம்புவதற்கு அவருக்கு உரிமை உள்ளது. ஆனால், அதனை அரசாங்கத்தின் பிரதிநிதியாக அவர் செய்யும் போது கேள்வி எழுப்பும் உரிமை குடிமக்களுக்கு எழுகின்றது.

அறிவியல் பூர்வமல்லாத சிந்தனை மார்க்கத்தைக் கொண்டுள்ள அல்லது கருத்து முதல்வாத சிந்தனைப் போக்கைக் கொண்டுள்ள தெற்காசிய நாடுகளில் இதுபோன்ற மூட நம்பிக்கைகள் அதிகம். மக்களை மாக்களாக வைத்திருக்க நினைக்கின்ற ஆட்சியாளர்களின் கருவியாகப் பாவிக்கப்படும் இத்தகைய மூடப் பழக்க வழக்கங்கள், மத நம்பிக்கைகள், அனுட்டானங்கள் நகைப்புக்குரியனவையாகவும், விமர்சனத்துக்கு உட்பட்டவையாகவும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் அடிப்படையில் சிந்திப்பவர்களுக்குத் தோன்றினாலும், இத்தகைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றுபவர்களைப் பொறுத்தவரை அவை புனிதமானவையே.

கேள்விகளுக்கு அப்பாற்பட்டவை. "யூலியட்ஸ் சீஸர் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்டவர்" என்ற சொலவடையைப் போன்று இத்தகைய பழக்க வழக்கங்களும் விமர்சனத்துக்கு அப்பாற்பட்டவை என்பது அவர்களது கருத்து. எனினும், ஏன்? எதனால்? எதற்கு? என்ற கேள்விகள் ஊடாக அறிவியலில் முன்னேறி, இன்றைய உன்னத நிலையை அடைந்துள்ள மனித சமூகம் இதுபோன்ற விடயங்களைக் கண்டும் காணாமலும் இருந்துவிட முடியாது.

கொரானாக் கொள்ளைநோய் அறிமுகமான காலப் பகுதியில் அதுவொரு சாதாரணமான இருமல், தடிமன், காய்ச்சல் போன்றதே என்று எள்ளலாகப் பேசி, அதனை அசட்டை செய்த இந்தியா, அமெரிக்க மற்றும் பிரேசில் நாடுகளின் அரசுத் தலைவர்கள், அதற்கான விலையாக இலட்சக் கணக்கான மக்களின் உயிர்களைத் தந்து நிற்கிறார்கள்.

இந்தியாவைப் பொறுத்தவரை ஆலய வழிபாடு, விளக்கேற்றுதல், கை தட்டுதல், "கொரானா போ" என்று கூடிநின்று கோசம் எழுப்புதல் போன்ற ஆட்சியாளர்களின் வழிகாட்டுதல்(?)கள் ஈற்றில் மிகப் பாரிய அழிவையே ஏற்படுத்தி நிற்பதை நாம் அறிவோம். அதே போன்றதொரு பாதையிலேயே சிறி லங்கா ஆட்சியாளர்களும் செல்ல முனைகிறார்களோ? என்னும் ஐயம் தற்போது எழுந்துள்ளது.

உலகின் பலம் பொருந்திய நாடுகள் யாவும் கொரானாத் தடுப்பு மருந்து கண்டுபிடிப்பதற்கான ஆய்வுகளில் ஈடுபட்டு வருகின்றன. சீனா, ரஸ்யா ஆகிய நாடுகள் மருந்து கண்டுபிடித்து விட்டதாகவும், அவை இறுதிக் கட்டச் சோதனையில் உள்ளதாகவும் அறிவித்துள்ளன. அதேவேளை, மருந்து கண்டுபிடிப்பில் காட்டப்படும் வேகம், மருந்தின் தன்மையில் பாதிப்பைக் கொண்டிருக்கக் கூடும் என்ற எச்சரிக்கைகளும் எழுப்பப்பட்டு நிற்கின்றன.

பல்வேறு சுகாதார நடவடிக்கைகள் ஊடாக, கொரானாப் பரவலின் வேகத்தைக் கட்டுப்படுத்த முடியும் என உலக சுகாதார நிறுவனம் அறிவித்துள்ளது. இத்தகைய நடைமுறைகளையே உலக மக்கள் யாவரும் கடைப்பிடித்து வருகின்றனர். கொரோனவோடு போராடி, வெறுத்துப் போயுள்ள ஆட்சியாளர்கள் பலரும் கொரோனாவோடு வாழ்வதற்கு மக்கள் பழகிக் கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுத்து நிற்கின்றனர். அது ஒருவகையில் நேர்மையான முயற்சி என்று கூடச் சொல்லாம். விடை தெரியாத பிரச்சனைகளுக்குத் தவறான விடையை முன்மொழிவதை விடவும், விடை தெரியாது என நேர்மையோடு ஒத்துக் கொள்ளுதல் பெரிய விடயம்.

சிறி லங்காவைப் பொறுத்தவரை கொரோனா கண்டறியப்பட்ட ஆரம்ப காலகட்டத்தில், அந்த நோய்க்கு எதிராகப் பல இறுக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டதால் பாராட்டுப் பெற்றவர் அரசுத் தலைவர் கோத்தாபய ராஜபக்ச. அத்தகைய நடவடிக்கைகள் காரணமாகக் கொரோனா கட்டுப்பாட்டிற்குள் வந்தது மட்டுமன்றி, அவர் சார்ந்த கட்சிக்கு தேர்தலில் மாபெரும் வெற்றியையும் ஈட்டிக் கொடுத்தது. முதலாவது அலையை வெற்றிகரமாகச் சமாளித்த அவரால், அவர் தலைமையிலான அரசாங்கத்தால் இரண்டாவது அலையைச் சமாளிக்க முடியாமற் போன காரணம் என்ன?

**இதனை இதனால் இவன்முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது குறள். ஒருவருடைய பலத்தை, திறமையை அறிந்து, அவரை அந்தப் பொறுப்புக்கு நியமிக்க வேண்டும் என்பது வள்ளுவனின் ஆலோசனை. இராணுவ உயர் அதிகாரியாகப் பணியாற்றிய அனுபவமுள்ள கோத்தாபய ராஜபக்ச, இந்தக் குறளைத் தெரிந்திருக்காது விட்டாலும், அது சொல்லுகின்ற கருத்தை நிச்சயம் அறிந்திருப்பார். திறமையற்ற ஒருவர் ஏதோவொரு காரணத்தால் ஒரு பொறுப்புக்கு வந்துவிட்டால் அவரை எவ்வாறு கையாள்வது? என்பதைப் பற்றியும் அறிந்திருப்பார்.

எனவே, சுகாதார அமைச்சர் விடயத்தில் அவர் எவ்வாறு நடந்து கொள்ளப் போகின்றார்? என்பதை அறிய பகுத்தறிவுடன் சிந்திக்கும் ஒவ்வொருவரும் ஆவலாக உள்ளனர். தனது நடவடிக்கையை அவர் விரைந்து செற்படுத்துபவராக இருந்தால் அது நாட்டுக்கு நல்லது.

மறுபுறம், தனது செயல் தொடர்பாக எழுந்துள்ள விமர்சனங்களைப் புறக்கணிக்கும் வகையிலேயே பவித்ரா வன்னியாராச்சி செயற்பட்டு வருவதைக் காண முடிகின்றது. தனது செயலை நியாயப் படுத்தியுள்ள அவர், ஒருபடி மேலே சென்று "இலங்கை மக்களுக்கு நல்லது நடக்கும் என்றால், கடலில் குதிக்கவும் தயாராக இருப்பதாக" தெரிவித்துள்ளார். அவருக்கான பதிலை ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் மிகச் சரியாகவே கொடுத்துள்ளார். "மக்கள் மீது உண்மையான அக்கறை இருந்தால், அவர் கடலில் மூழ்க வேண்டிய தேவையில்லை. பதவி விலகி, சிறப்பாகச் செயற்படக் கூடிய ஒருவருக்கு அந்தப் பதவியை வழங்கினாலே அது பெரும் உதவியாக இருக்கும்" என்பது அவரது பதில்.

அறிவியல் அடிப்படையில் சிந்திக்கும் ஒருசிலர் ஆளுங்கட்சியில் நாடாளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என நம்புவதற்கு இடமிருப்பதால் முஜிபுர் ரஹ்மான் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார். அது எமக்குப் புரிகின்றது. சிறி லங்கா ஆட்சியாளர்களுக்குப் புரியுமா?









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna Stores

**Geschäftsführer : Herr Thayaharan Nadarajah**

மொத்தமாகவும், சில்லறையாகவும்
NSR தயாரிப்புகளை விற்பனை செய்ய
விரும்புவோர் தொடர்புகொள்ளுங்கள்

தயாரிப்புகளின்
ஏக விநியோகஸ்தர்கள்

## மண்மணம் மாறாத சுவைதரும்
## தரமான என்.எஸ்.ஆர். தயாரிப்புகள்



ஆசியா, ஆப்பிரிக்கா, சீனா நாடுகளின் அனைத்து விதமான
உணவுப் பொருட்களுடன் மரக்கறி வகைகள், மீன் வகைகள்,
இறைச்சி வகைகள் அனைத்தையும் தரமாகவும், மலிவாகவும்
பெற்றுக் கொள்ள பீல்பெல்ட் நகரில் ஒரு மாபெரும் நிறுவனம்

**www.jaffnastores.com**
**info@jaffnastores.de**

**Tel. - 0521 174794**
**Mobile - 01732807906**

**Feilenstraße 8**
**33602 Bielefeld**





Digitized by Noolaham Foundation.

**இது மாவீரர் மாதம். தமிழ்ச்சமூகம் கட்டுக்கதைகளை உடைத்தெறிந்து, வெளிவந்த மாவீரர்களின் உண்மைக் கதைகளை வணங்க வேண்டும் என்ற அவசியத்தை, ஆங்கில உரை மேலோட்டங்களோடு ஆய்வாளர் சேது அவர்கள் எழுதிய உரையை இப்பகுதியில் சுருக்கி, தமிழாக்கித் தருகிறேன்.**

தேவன்



## நான் தெள்ளியவோர் முடிச்சவிக்கி

# மாவீரர் வழிபாடு



நமது எதிரிகளான இந்துத்வாவும், சிங்களமும் அடிப்படையில் கட்டுக்கதைகளைக் ***(myths)*** கொண்டே நம்மை அழிக்க முயல்கின்றன. சிங்களத்திற்கு மகாவம்சம், இந்துத்வாவிற்கு புராண இதிகாச கட்டுக்கதைகள். நாம் கட்டுக்கதைகளை முட்டாள்தனமானவை என்று நிராகரிக்க முடியாது. அது மாபெரும் பிழையாக முடியும். கட்டுக்கதைகள் அரசியலை இயக்கும் வல்லமை பெற்றவை. "நாம் எது மாதிரியான கட்டுக்கதைகளை உள்வாங்குகிறோமோ, அதுபோன்ற அரசியலையே நாம் விரும்புகிறோம்" என்கிறார் பிளேட்டோ.

இது ஆதிகாலத்திலிருந்து மனிதனை இயக்கி வருபவை, மனிதன் பகுத்தறிந்துச் சிந்தித்துச் செயல்படுபவன் அல்ல, அதுவும் குறிப்பாக அரசியலில்.

இந்துத்வாவின் பின் பெரும்பாலானோர் செல்வதற்குக் காரணம் கட்டுக்கதைகள்தான். இன்று பல தமிழர்கள் இந்துத்வாவிற்குள் இணைவதும் இதுதான் காரணம். மேற்குலகில் மத சார்பற்ற அரசுகள் இயங்குகின்றன. அதனால் கட்டுக்கதைகள் அடக்கப்பட்டுவிட்டன என்பது, சரியானப் புரிதலாக இருக்காது. பல ஆய்வாளர்களின் வாதம் என்னவென்றால், மதசார்பற்ற அரசுகள் உருவாவதற்கு காரணமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறித்துவத்தின் கட்டுக்கதைகள்தான் என்கின்றனர். கிறித்துவத்தில் இவ்வுலகமும், கடவுளின் உலகமும் இரண்டாகப் பிரிக்கப்படுகிறது. இரண்டும் தனித்து செயல்படலாம் என்ற வாதம் உள்ளது. இதற்கு சிறந்த மேற்கோள்:

மதசார்பின்மை என்பது கூட மதம் சார்ந்தே உருவாகிறது என்பது பலரின் வாதம். இன்று பல இசுலாமிய நாடுகளில், மதசார்பின்மை உருவாவது கடினமாகிறது. இதற்கானக் காரணம் அவர்கள் கொண்ட கட்டுக் கதைகள் தான்.

இந்துத்வா கட்டுக்கதைகளும் மதசார்பின்மைக்கு வலு சேர்ப்பதில்லை.



இராமாயணம், மகாபாரதம் கூறும் சாதிக் கட்டமைப்புத்தான் இந்து அரசியல் கட்டமைப்பு. அதை நோக்கிதான் இந்தியா சரிந்துகொண்டிருக்கிறது.

மார்க்சின் பொதுவுடைமைக் கொள்கைகூடக் கிறித்தவத்தின் புதிய உலகைப் படைக்கக்கூறும் ***"millenarianism"*** என்பதிலிருந்து வருவதுதான் என்பது பலரின் வாதம். மார்க்சின் கொள்கைகள் எந்தெந்த நாடுகளின் கட்டுக்கதைகளின் கூட ஒத்துப்போகிறதோ, அங்குதான் எடுபட்டது. இதை கிறித்துவ நாடுகளிலும், கன்பூசிய நாடுகளிலும் காணலாம். மார்க்சின் கருத்துகள் சாதிமத கட்டுக் கதைகளைக் கொண்ட இந்தியாவிலும், மதப்பற்று கொண்ட இசுலாமிய நாடுகளிலும் எடுபடவில்லை.

தமிழ்த் தேசியம் என்பது மதசார்பற்ற தேசியம். இது நாம் பகுத்தறிந்து வந்தது என்று நினைக்கிறோம். இது எங்கிருந்து வந்தது? என்பதற்கான விடையை இரவி வைத்தீசு அவர்கள் எழுதிய நூல் தெளிவாக விவரிக்கிறது. தமிழ்த்தேசியம் என்பது வள்ளலார், திருவள்ளுவர், மறைமலை அடிகள் ஆகியோரின் தத்துவங்களிலிருந்து பிறக்கிறது. தமிழ்த்தேசியம் என்பது பெரியார் உருவாக்கியது கிடையாது. தமிழ்த்தேசியம்தான் பெரியாரை உருவாக்கியது.

இன்று தமிழ்த்தேசியத்தை வளரவிடாமல் மக்களை திசை திருப்புவது இருவகை கட்டுக்கதைகள்:

**1.இந்துத்வாவின் கட்டுக்கதைகள் :** இது சாதி அரசியலையும், மத அரசியலையும் ஊக்குவிக்கிறது. மேலும், இந்து கட்டுக்கதைகளில் கடவுளர் ஒருவருக்கொருவர் சண்டை போடுவதுபோல, உள்ளுக்குள் சண்டைபோடுவதையும் அதிகம் ஊக்குவிக்கிறது. கடவுளுக்கு இலஞ்சம் கொடுப்பது சமூகத்தில் இலஞ்சத்தையும் ஊக்குவிக்கிறது. இதை பிளேட்டோ அன்றே தெளிவாக உணர்ந்தவர்.

**2. திரைப்படக் கட்டுக்கதைகள் :** இது மதக் கட்டுக்கதைகளைப் போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மையைக் கொண்டதே. வெறும் கதைகள் பலம் வாய்ந்தது அல்ல. கதைகளின் பலம் என்பது சடங்குகளின் துணையுடன் வருவது. சடங்குகள் ஒரு சமூகக் கூட்டு செயல்பாடு, அதுபோல திரைப்படங்களும் செயல்படுகின்றன. திரையரங்குகள், கோவில்கள் போன்று கூடவும், வரிசையில் நின்று காணிக்கை செலுத்துவதும், கடவுளைத் தரிசிப்பது போல கதாநாயகர்களைத் தரிசிப்பது ஆகியது. இது போதாது என்று பால் அபிசேகமும், ஆட்டமும் சேர்ந்து கொண்டன. இது அடிப்படையில் மதங்கள் எவ்வாறு செயல்படுகின்றனவோ, அதே போன்ற உளவியல்தான்.

கட்டுக்கதைகளும், சடங்குகளும் சேர்ந்து, கதாநாயகர்களைக் கடவுளாக மாற்றுகின்றன. இது முடிவில் அரசியலுக்கு வழி வகுக்கின்றன. இதையும் அன்றைய பிளேட்டோ நன்கு உணர்ந்தார். ஒரு சிறப்பான நாட்டை உருவாக்க வேண்டுமென்றால், கட்டுக்கதைகளைத் தடை செய்யவேண்டும் என்று முடிவுக்கு வந்து, கவிதைகளைத் தடை செய்யவேண்டும் என்கிறார். அன்று கவிதைகள் கட்டுக் கதைகளைப் பரப்பியதால், இந்த முடிவிற்கு பிளேட்டோ வந்தார். எது நாட்டிற்கு உகந்ததோ, அதை மட்டுமே அனுமதிக்க வேண்டும் என்கிறார்.

இவ்விரண்டு கட்டுக்கதைகளும் தமிழ்ச்சமூகத்தை ஆட்டிப் படைக்கும் வரை ஒரு நல்ல சமூகத்தை நாம் உருவாக்க நினைப்பது என்பது கானல் நீர்தான். இதை எப்படி எதிர்ப்பது? தமிழ்த்தேசிய வரலாற்றில் மறைமலை அடிகள், பெரியார், பிரபாகரன் ஆகியோரால் மூன்று வழிகள் உருவாக்கப் பட்டன. இனி இவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம்:

**மறைமலை அடிகள் :** இந்துத்வாவிற்கு எதிராக சைவ சித்தாந்தத்தைத் தமிழர் மதமாக பல மாறுதல்களுடன் முன்மொழிந்தார். சைவ மதத்தை ஆரிய மதத்திற்கு எதிரானதாக



நிலைப்படுத்தினார். ஆரிய, திராவிட வரலாற்றை எழுதிப் பரப்பினார். சாதிகளுக்கு புதிய விளக்கத்தை அளித்தார். ஆனால், அவரின் கருத்துகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஆரியம் சைவத்தை ஏப்பம் விட்டு, பல நூற்றாண்டுகள் ஆகிவிட்டன. புதிதாக துளிர்விடுவதற்கான முயற்சிகள் மறைமலை அடிகளுடன் மறைந்தது. இன்றும் சில அமைப்புகள் இதைத் தொடர முனைகின்றன. ஆனால், அவை பெரிதாக வெற்றி பெறுமா? என்பது சந்தேகமே. இதற்கு நான் கருதும் காரணங்கள்:

சைவத்தின் கட்டுக்கதைகளை ஆரியத்தைத் தாண்டி தனக்கெனத் தனித்துவத்தை உருவாக்க முடியவில்லை. அவை ஆரியத்தின் ஒரு பாகமாகத்தான் மக்களால் பார்க்கப்படுகிறது. பெரும்பாலான மக்களின் சடங்குகள் ஆரியத்தை வலுப் படுத்தவே செய்கின்றன. சைவத்திற்கான ஆரியம் விழுங்காத / விழுங்க முடியாத தனித்த சடங்குகள் இருப்பாதாகத் தெரிவதில்லை. இது என்னுடைய மேலோட்டமான பார்வையே!. ஆழமாக அறிந்தவர்கள் விரிவு படுத்தலாம். கடந்த வரலாறு சைவத்திற்கு சாதகமாக இல்லை. தமிழ்த் தேசியம் என்பது மதச்சார்பற்றது. சைவத்தைத் தமிழரின் மதமாக முன்மொழிவது, மற்ற மதத்தினரை விலக்கவே செய்யும். இது ஏற்புடையது அல்ல.

சைவ கட்டுக்கதைகள் எவ்வாறு தமிழ்த்தேசிய அரசியலுக்கு ஆதரவானது என்பது தெளிவாக இல்லை. தமிழுக்குக் கண்டிப்பாக ஆதரவானது என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெளிவானது. பல சைவர்களுக்கு "தமிழும், சைவமும் இரு கண்கள்" என்ற நம்பிக்கை கொண்டவர்கள். தமிழ்த் தேசியக் கருத்தியலை உருவாக்கியதில் சைவர்களுக்கு முக்கிய பங்கு இருக்கிறது. ஆனால், இக்கட்டுக் கதைகளால் மக்களை ஒன்றிணைத்து, வலுவான தமிழ்த்தேசியம் உருவாக்கத் தேவையான வலு இருக்கிறதா? என்பது சந்தேகமே.

**பெரியார் :** மக்கள் மத நம்பிக்கைகளிலிருந்து வெளியேற்றி, பகுத்தறிவுள்ளவர்களாக மாற்ற வேண்டும் என்ற கொள்கை கொண்டிருந்தார். ஆனால், இது வெற்றி பெறவில்லை. மனிதனிடம் பகுத்தறிவும், பகுத்தறிவற்ற தன்மையும் இணைந்தே உள்ளன. வெறும் பகுத்தறிவு கொண்ட மனிதனாக மாற்றுவது முடியாத காரியம். இதை நிறுவிதான் டேனியல் கானமேன் நோபல் பரிசை வென்றார். முடிவில் திராவிடஅரசியல் இயக்கங்களும் "ஒன்றே குலம், ஒருவனே தேவன்" என்று மத நம்பிக்கையை ஏற்றுக்கொண்டன. அடிப்படையில் திராவிட இயக்கத்தால் இந்துத்வா கட்டுக்கதைகளை உடைக்க முடியவில்லை.

திராவிட அரசியல் இயக்கங்களின் வெற்றி என்பது சமூக நீதியின் மூலம் வருவது மட்டுமே. ஆனால், சிக்கல் என்னவென்றால், அவர்களின் வெற்றியில்தான் அவர்களின் தோல்வியும் உள்ளது. சமூக நீதிக் கொள்கைகளால் முன்னேறியவர்களுக்குச் சமூக நீதியின் தேவை குறைகிறது. அதன் பின்பு அவர்களுக்கு மதம் பிடிக்க ஆரம்பிக்கிறது. இன்று சமூக நீதியின் மூலம் வாய்ப்பைப் பெற்று வளர்ந்த பிள்ளைகளே இந்துத்வா அரசியலுக்கு ஆதாரவளிக்கிறார்கள். இது தொடரும் என்று எதிர்பார்க்கலாம். இந்துத்வாவின் கட்டுக் கதைகளை உடைக்காதவரை, இந்துத்வாவிற்கான வாசல் திறந்தே இருக்கிறது. மேலும், திராவிட அரசியலை திரைப்பட நாயகர்கள் / நாயகிகள் எளிதாக கடத்தி விட்டார்கள். திராவிடம் என்பது இரு கட்டுக் கதைகளையும் எதிர்கொள்ள முடியாமல் நிற்கிறது. அதனிடம் தீர்வு இல்லை.

**பிரபாகரன் :** ஈழத்தில் உள்ள தமிழர்களும், தமிழ்நாட்டில் உள்ளவர்களைப் போலவே மத, திரைப்படக் கட்டுக்கதைகளை உள்வாங்கியவர்கள். அதே சாதிகள்,






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அதைவிட மிகப்பெரிய உண்மைக் கதைகளை நட்டார்கள்.

இதன் தாக்கம் மத கட்டுக்கதைகள் உருவாக்கியதைவிட மிகப்பெரியதாக இருந்தது. மேலும் புலிகள் திரைப்படக் கட்டுக்கதைகளின் மோசமான விளைவுகளை உணர்ந்து, தணிக்கை செய்து, தேசியப் போராட்டத்திற்கு ஆதரவானப் படங்களை மட்டும் வெளியிட்டார்கள்.

தமிழ்த் தேசியக் கதைகளை வளர்த்தும், எதிரான கட்டுக்கதைகளைக் கட்டுப்படுத்தியும்தான் புலிகளால் பலம்பெற முடிந்தது. இன்று புலிகள் இல்லாத நேரத்தில் மற்ற கட்டுக்கதைகள் எழுச்சி பெறுகின்றன. இதன் விளைவை ஈழ அரசியலில் சமூகத்திலும் காணலாம். ஈழம் பழையபடி மத அரசியல், பிரதேச அரசியல், சாதி சண்டைகள், சுயநல அரசியல்வாதிகள் என பழையபடி தமிழகத்தைப் போல செயல்பட ஆரம்பித்து விட்டனர்.

பிளவுகள், பூசல்கள் கொண்ட சமூகம்தான். ஆனால், பிரபாகரன் அப்படிப்பட்ட மக்களை இணைத்து, உலகிலேயே மனபலத்தில் நிகரற்ற படையை உருவாக்கி, இரு நாட்டு இராணுவங்களைத் தோற்கடித்தவர். இது எவ்வாறு சாத்தியமானது? மக்களை ஒன்று திரட்ட, மத கட்டுக்கதைகளைவிட பலம் வாய்ந்த ஒன்று தேவைப்பட்டது. அந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய அவர்கள் உருவாக்கியதுதான் "மாவீரர் வழிபாடு". மனித வரலாற்றில் வீர வழிபாடு என்பது இறை வழிப்பாட்டுக்கும் முந்தையது. இறை வழிபாடே வீர வழிபாட்டின் தொடர்ச்சிதான். வீர வழிபாடு இல்லாமல், இறைவழிபாடு இல்லை. கடவுளர் சக்தி வாய்ந்ததாக, ஆயுதங்களுடன் இருப்பது இதனால்தான்.

புலிகளுக்குக் கட்டுக்கதைகள் தேவைப்படவில்லை. அவர்கள் உண்மையான வீர கதைகளை, வரலாற்றை உருவாக்கினார்கள். அதை மக்களிடம் பரப்பினார்கள். வீர வழிப்பாட்டிற்கு பல்வேறு சடங்குகள் உருவாக்கப்பட்டன. அதில் முக்கியமானதுதான் 'மாவீரர் நாள்'. வீர வழிபாடு என்பது பண்டைய தமிழர் வரலாறும் என்பதால், அதை மீளுருவாக்கம் செய்வது எளிதானது. பண்டைய வரலாற்றைப் போலவே, நடுகல் இட்டு வழிபட்டார்கள். பிரபாகரன் விரும்பவில்லை என்றாலும், மக்கள் பிரபாகரனைக் கடவுளாகவே பார்த்தனர். இன்றும் பலர் அவ்வாறே பார்க்கின்றனர். அவர்கள் மதக் கட்டுக்கதைகளைத் தடை செய்யவில்லை. அதற்குப் பக்கத்தில்

**தீர்வு என்ன? :** நாம் தீர்வை நோக்கிச் சிந்திக்கும் பொழுது, முதலில் பகுத்தறிவின் இயலாமையை முதலில் உணர வேண்டும். இதைத் தத்துவமேதை கேசிரர் தெளிவாகக் கூறுகிறார் :

"அறிவியலில் பகுத்தறிவிற்கு இருக்கும் முக்கியத்துவம், அரசியலிலும் / சமூக வாழ்க்கையிலும் கிடையாது. சொல்லப்போனால் அரசியலிலும் / சமூக வாழ்க்கையிலும் பகுத்தறிவின் தோல்வி முழுதானது. பகுத்தறிவு கட்டுக்கதைகளின் முன் மண்டியிடுகிறது. பகுத்தறிவினால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுக்கதைகளை உடைக்க முடியாது."

இந்துத்வாவின் அல்லது சிங்களத்தின் வலிமை எதிலிருந்து வருகிறது? என்று ஆராய்ந்தால், அவற்றின் ஆணிவேர் கட்டுக்கதைகளில் ***(myths)*** போய்தான் நிற்கிறது. இந்துத்வாவிற்கு சனாதானம், சிங்களத்திற்கு மகாவம்சம். நாம் அடிப்படையில் போரிடுவது கட்டுக் கதைகளுடன் தான். ஆனால், உண்மை என்னவென்றால், நாம் அவர்களிடம் தோற்றுக் கொண்டிருக்கிறோம். சன் சூ / திருவள்ளுவர் கூறியபடி முதலில் எதிரியின் தன்மை, பலம், பலவீனம் ஆகியவற்றை உணர வேண்டும். இதுதான் உத்திகளின் முதல் அடி. இதை விளங்காமல் நாம் அவர்களின் கட்டுக்கதைகளின் முட்டாள் தனத்தைப் பார்த்துச் சிரித்துக் கொண்டிருந்தால், சிலைகளை உடைத்துக் கொண்டிருந்தால், அவர்கள்தான் முடிவில் நம்மைப் பார்த்துச் சிரிப்பார்கள்.

இதற்குத் தீர்வு என்பது, பெரியாரின் பகுத்தறிவோ அல்லது மறைமலை அடிகளின் சைவமோ கிடையாது. அதற்காக அவை கூடாது என்பது அல்ல!. அவற்றிற்கும் சமூகத்தில் இடமுண்டு. ஆனால், அவை தீர்வு கிடையாது. பிரபாகரனின் 'மாவீரர் வழிபாடு' ஒன்றுதான் கட்டுக்கதைகளை அடக்கி, மதச்சார்பின்மையைக் காத்து, அரசியலில் வலுப் பெற வைக்கும் தன்மை வாய்ந்தது. இது வரலாற்றில் செய்முறையூடாக நிரூபிக்கப்பட்ட ஒன்று.

இன்று இது ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்ட ஒன்றுதான். இன்றை தமிழ்த்தேசிய எழுச்சியின் அடித்தளம் என்பது பிரபாகரனும், மாவீரர் வழிபாடும்தான். இதை மேலும் விரிவாக்கி, சிறப்பித்து, அனைத்து மக்களையும் உள்வாங்கிச் செயல்படவேண்டும். குழந்தைகளுக்கு சிறுவயதிலிருந்து எவ்வாறு மாவீரர்களின் வரலாற்றை எடுத்துச் செல்கிறோம் என்பது அதிமுக்கியமானது. மத கட்டுக்கதைகளை பின்தள்ளி, மாவீரர் கதைகள் முன்னுக்கு நிற்கும்படி செயல்படவேண்டியது தேவையானது.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிந்து சமவெளி நாகரிகத்தின் தொடர்ச்சிதான் கீழடி நாகரிகம்

சிந்து சமவெளி நாகரிகத்துக்கும் திராவிட நாகரிகத்துக்கும் தொடர்பு உண்டு என சொல்லப் பட்டாலும், அதற்கான அறிவியல் பூர்வமான திறவுகோல் கீழடியில் இப்போதுதான் கிடைத்துள்ளது. இந்துத்துவ சக்திகளின் கைகளில் ஆட்சியதிகாரம் சிக்கியுள்ள இன்றைய நிலையில் இந்திய வரலாற்றையே உலுக்கி திருத்த வல்லமை கொண்ட இரண்டு ஆய்வுகள் மிக சமீபத்தில் நடந்தேறியுள்ளன. ஒன்று ராக்கிகர்கி மரபணு ஆய்வு மற்றொன்று கீழடி தொல்லியல் ஆய்வு. ஒன்று சிந்து சமவெளி நாகரிகத்திற்கு பின்னரே சமஸ்கிருதத்தை சுமந்துகொண்டு ஆரியர்கள் துணைக் கண்டத்திற்கு வந்தார்கள் என்பதை உறுதி செய்துள்ளது. மற்றொன்று சிந்து சமவெளி நாகரிகத்தின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கங்கை சமவெளியில் இரண்டாம் கட்ட நகர குடியேற்றம் நடந்த அதே காலகட்டத்தில் தமிழகத்திலும் அதே போன்றதான குடியேற்றம் நடந்தேறியுள்ளது என்றும் சிந்து சமவெளி குறியீட்டிற்கும் தமிழிக்கும் (தமிழ் பிராமி என்று தற்போது அழைக்கப் படுகிறது) உள்ள உறவை உறுதி செய்யும் பானை கீறல்களையும் கண்டறிந்துள்ளது.

கீழடி அகழாய்வு மையத்தில் கி.மு 580-ம் ஆண்டைச் சேர்ந்த பானை உள்ளிட்ட தொல்பொருள்கள் தமிழக தொல்பொருள் அகழ்வாராய்ச்சி குழுவினால் சமீபத்தில் கண்டெடுக்கப் பட்டிருக்கின்றன. அப்பானைகளில் உள்ள "கிராஃபிட்டி" குறியீடுகள் அல்லது கீறல்கள் சிந்து சமவெளி நாகரிக எழுத்து வடிவங்களின் தொடர்ச்சியை சுட்டிக்காட்டுவதாக அகழாய்வு குழுவின் சமீபத்திய அறிக்கை கூறுகிறது.

சிந்து சமவெளி எழுத்துக்கள் கி.மு 5,000 முதல் கி.மு 1,500 வரை அம்மக்களால் பயன்படுத்தப்பட்டது. சிந்து சமவெளி நாகரிகம் வீழ்ச்சியடையத் தொடங்கிய காலத்தில்தான் ஸ்டெப்பி புல்வெளியில் இருந்து ஆரியர்கள் இந்திய துணைக்கண்டத்திற்கு வந்ததை மரபணு ஆராய்ச்சி உறுதி செய்துள்ளது.

கீழடி அகழாய்வு அறிக்கைக்கு ஒரு அரசியல் முக்கியத்துவம் உள்ளது. சிந்து சமவெளி நாகரிக மக்கள்தான் தமிழர்களின் மூதாதையர்கள் என்றும் சிந்து சமவெளி மக்கள் பேசியது ஒரு திராவிட மொழி என்றும் நீண்ட நாட்களாகவே திராவிட அரசியல்வாதிகள் கூறி வருகின்றனர். மொழியியல் நோக்கில் ஆய்வாளர்கள் இதை உறுதிப் படுத்தியுள்ளனர். 1964-ல் இரசியாவையும் ஃபின்லாந்தையும் சேர்ந்த ஆய்வாளர்கள் தனித்தனியாக ஆய்வு செய்து சிந்து சமவெளி எழுத்து வடிவம் திராவிட எழுத்துதான் என்பதை நிறுவினர். பின்னர் சிந்து சமவெளி எழுத்து வடிவத்தின் முன்னணி ஆய்வாளரான அஸ்கோ பர்போலா சிந்து சமவெளி எழுத்து வடிவத்தை திராவிட எழுத்து வடிவத்துடன் ஒப்பிட்டு பிரபலமான கருதுகோளை முன்வைத்தார்.

ஆனால் இதை உறுதிப்படுத்த இது மட்டுமே போதாது. ஏனெனில் சிந்து சமவெளி நாகரிகம் ஒரு நகர நாகரிகம். தமிழ் நாகரிகத்திற்கும் அதற்குமான தொடர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான தொழில்நுட்ப வசதிகளும் போதுமான தொல்லியல் மற்றும் மரபணு சான்றுகள் அதுவரை கிடைக்காமலிருந்தன. முன்னதாக அரிக்க மேட்டில் 1947-லும், காவேரிப் பூம்பட்டினத்தில் 1965-லும், ஆதிச்சநல்லூரில் 2005லும் நடந்த மூன்று அகழாய்வுகளில் ஒன்றுக்கூட நகர்புற குடியேற்றத்திற்கான உறுதியான சான்றுகள் எதையும் வழங்கவில்லை.

ஆனால் 2015-ம் ஆண்டில் கீழடியில் தொடங்கப்பட்ட அகழ்வாராய்ச்சி சிந்து சமவெளி மற்றும் கங்கை பகுதி நகர்ப்புற குடியேற்றம் போலவே தமிழகத்திலும் நடந்ததற்கான ஏராளமான சான்றுகளை தன்னுள்ளே புதைத்திருக்கிறது.

"மறைந்து போன சிந்து சமவெளி குறியீடுகளுக்கும் பிராமி எழுத்து வடிவங்களுக்கும் இடைப்பட்ட எழுத்து வடிவத்தை கீறல்கள் (கிராஃபிட்டி) என்று ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இந்த கீறல்கள் சிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமவெளி எழுத்து வடிவத்திலிருந்து தோன்றிய பிராமி எழுத்து வடிவங்களுக்கு இணைப்பு சங்கிலியாக இருந்துள்ளது. எனவே இதை வெறும் குறியீடாக கருத முடியாது. சிந்து சமவெளி குறியீடுகளைப் போலவே இவற்றை இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை" என்று அந்த அறிக்கை கூறுகிறது.

முன்னதாக அகழாய்வு செய்யப்பட்ட ஆதிச்சநல்லூர், கொற்கை, ஆலங்குளம், கொடுமணல், கரூர், தேரிருவேலி, உறையூர், மங்குளம், பேரூர் மற்றும் ஏனைய பகுதிகளிலும் இது போன்ற குறியீடுகள் பொறிக்கப்பட்ட பானைகள் கிடைத்துள்ளன. தமிழ்நாட்டைத் தவிர, இந்தியாவின் வேறு சிலப் பகுதிகளிலும், இலங்கையிலும் பனையோட்டு கீறல்கள் கிடைத்துள்ளன. இந்திய துணைக் கண்டத்தில் இதுவரை கிடைத்த பனையோட்டு கீறல்களில் 75 விழுக்காட்டிற்கும் மேல் தமிழ்நாட்டை சேர்ந்தவை என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக பானை ஈரமாக இருக்கும் போதோ அல்லது உலர்ந்த பிறகோ அதில் எழுத்துக்கள் பொறிக்கப்படும். கீழடியில் கண்டறியப்பட்ட பானைகளில் காய்ந்த பிறகே எழுத்துக்கள் பொறிக்கப் பட்டுள்ளன. எனவே பானையை விலைக்கு வாங்கிய பிறகு உரிமையாளர்களால் அவை பொறிக்கப் பட்டுள்ளன. மேலும், பானைகளில் உள்ள வித விதவிதமான எழுத்து பாணிகள் கி.மு ஆறாம் நூற்றாண்டு தமிழ் சமூகத்தின் பரவலான எழுத்தறிவை பறைசாற்றுகிறது" என்று அந்த அறிக்கை மேலும் கூறுகிறது.

2018-ல் ஆறு மாதங்கள் அகழாய்வு பணிகள் நடைபெற்றதாக தமிழ்நாட்டு தொல்பொருள் ஆய்வுகளின் மைய ஆணையர் டி. உதய்சந்திரன் கூறினார். 2015-ம் ஆண்டிலிருந்து மூன்று முறை அகழாய்வு செய்த பிறகு இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் ஆய்வுப்பணியை நிறுத்திவிட்டது.

இந்திய வரலாறு என்பதே வேத கால நாகரிகம் என்று நிறுவ மோடி அரசாங்கம் துடித்துக்கொண்டிருந்த நேரத்தில், அதற்கான எந்தச் சான்றும் கிடைக்காத தருணத்தில், வெந்த புண்ணில் வேலை பாய்ச்சியதை போல 2016-ல் கி.மு 2-ம் நூற்றாண்டைச் சேர்ந்த தொல்பொருள்களை இந்திய தொல்பொருள் ஆய்வு மையம் கண்டறிந்திருந்தது. விளைவு தொல்பொருள் ஆய்வாளர் கே. அமர்நாத் ராமகிருஷ்ணனை இடமாற்றம் செய்தது. பின்னர் இப்பணியை தமிழக தொல்பொருள் ஆய்வு மையம் எடுத்துக்கொண்டு நான்காம் கட்ட ஆய்வினை முடித்து "கீழடி - தமிழ்ப்பண்பாட்டின் வேர்களைத் தேடி" என்ற தலைப்பில் ஆய்வு நூலையும் வெளியிட்டிருக்கிறது.

இது ஒருபுறமிருக்க கி.மு 2000-ம் ஆண்டில் சிந்து சமவெளி நாகரிகத்தின் வீழ்ச்சிக்குப் பிறகு சிந்து சமவெளி மக்கள் கிழக்கு மற்றும் தெற்கு நோக்கி நகர்ந்திருக்கக் கூடும் என்ற கருதுகோளை சமீபத்தில் செல் மற்றும் சயின்ஸ் அறிவியல் சஞ்சிகைகளில் வெளியிடப்பட்ட மரபணு ஆய்வுகள் உறுதிப் படுத்தியிருக்கின்றன.

தொல்பொருள் ஆய்வில் புதிய வெளிச்சத்தை கொடுத்த அதே நேரத்தில் ஆதித்தமிழர்களின் மரபணு ஆய்வுகளுக்கான கருவினை எலும்புக்கூடாக இன்னமும் கீழடி தன்னுள்ளே புதைத்து வைத்திருக்கும் என்பதை வரலாறு பதிலாகச் சொல்லும்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளம்
## திறக்கும் உண்மைகள்

# கொரோனா கவிகள்..



### பயம்

விதைக்கப்பட்டவன்
வீரியமானவனென்று
ஆரியனுக்குத் தெரிந்திருக்கிறது.
துயிலுமில்லங்கள் துடைத்தழித்தலில்
தெரிகிறது அவர் பயம்.



### மாவீரன்


தன்தாய் இறந்தபோதும் அழாதவன்
தாய்நாட்டின் கண்ணீர்துடைக்க இறந்தான்.

### கல்லறை மேனியர்

விழித்திருக்கும்போது அவர்கள்
நிசங்களைக் கனவாகக் காண்பார்கள்,
அக் கனவுகளுக்காகவே
நிரந்தரமாய்த் தூங்கிப்போவார்கள்.

### சரிசமம்!..

சாதி சமயம் தெரியாது
நிறம் குணம் தெரியாது
காசு பணம் தெரியாது
கல்வி பேதம் தெரியாது
சரிசமமாய்த் தாக்கும் கொரோனா!




### சிறை!..

கத்தியின்றி இரத்தமின்றி
உலகம் முழுவதையும்
சிறைப்படுத்திக் கொண்டது
கொரோனாக் கிருமி!..

**வ.சிவராசா** ஜேர்மனி

"உளம் திறக்கும் உண்மைகள்...." என்ற தலைப்பில்
உங்கள் மனதிலிருக்கும் புதிய சிந்தனைகளை
4 - 6 வரிகள் கொண்ட கவிதையாக்கி எமக்கு அனுப்பி வையுங்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அகர கவிக்களம்....



## ஒரு சிறு கிருமி

உலகையே அச்சுறுத்துகிறது
விஞ்ஞானம் இங்கே
எங்கே போனது?
மக்களோ பீதியில் வாழ
சுகாதாரமோ மாற்று
மருந்து தேட
காலமோ விரைந்தோட
கொரோனாவினால் மக்கள்
இறக்க
செய்வதறியா மனித இனம்
செத்துக்கொண்டிருக்கிறது.

**கெங்கா ஸ்டான்லி**

### துடிப்பு!..

பூமி எங்கும் பரவல்
துண்ணுயிர்க் கிருமி
விண்ணைத்தொடும் விஞ்ஞானம்
மருந்தைக்காணத் துடிப்பு!..

### அழிவு!..

ஆண்டவனும் காக்கவில்லை
அறிவியலும் காக்கவில்லை
ஆட்சிபுரிவோரும் காக்கவில்லை
கொரோனாவில் அழிந்திடும்
மாபெரும் மனித உயிர்கள்!..

**வ.சிவராசா**

### போராட்டம்

அடிமைகளை மீட்கத்துணிந்தவன்
போராளியாகிறான்.
விடுதலையை அனுபவிக்கத் துடிப்பவன்
மாவீரனாகிறான்.

### போராளி

ஒரேயொரு நஞ்சுக்குப்பியே உறவு.
இவர்களிடம் கற்கவேண்டும் துறவு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பகுதி.32

# உளவு பார்க்கும் நிறுவனங்கள்

அவதானி

நோய்க்கான மருந்தைக் கொடுக்கிறோம் என்ற போர்வையில் கொடுக்கப்படும் மருந்துகள், குறிப்பிட்ட நோயிலிருந்து குணமடைய வைக்கின்றன என்று உடல் உணர்ந்த போதும், அது உண்மையாகாது. அந்த மருந்து எந்த நோய்க்காக கொடுக்கப்பட்டதோ, அந்த நோய்க்கான நோய்க் கிருமிகளை வேறொரு நோயைக் கொடுக்கும் கிருமிகளை உற்பத்திச் செய்கின்றது.

இத்தொடரின் கடந்த பாகத்தில் குறிப்பிட்டது போல, நோய்க்கு கொடுக்கப்படும் மருந்துகளால் பக்க விளைவுகளை ஏற்படுத்துவதன் மூலம், தொடர்ச்சியாக ஒருவர் ஒன்றுமாறி ஒன்றாக மருந்தின் பக்க விளைவுகளால் நோயாளியாகவே இருப்பார்.

மக்களின் ஆரோக்கியத்தில் முழு அக்கறை உள்ள நாடுகள், நோயினால் பாதிக்கப்படுவோருக்கு கொடுக்கின்ற மருந்துகளுக்காக மற்றும் மருத்துவ உதவிகளுக்காகவும் பலகோடி பணத்தைச் செலவழிக்கின்றன.

இச்செலவானது ஒரு நாட்டை பொருளாதார ரீதியாக செம்மைப் படுத்தவோ, அபிவிருத்திகளைச் செய்யவோ தடையாக இருக்கின்றது. மக்களின் மகிழ்ச்சியான வாழ்வுதான் ஒரு நாட்டின் செல்வம் என்ற கொள்கை சிதைவுறத் தொடங்குகிறது.

இது ஒரு நாட்டின் அரசாங்கத்தின் மீது மக்கள் வெறுப்படையும் நிலையைத் தோற்றுவிக்கின்றது. வெறும் குளிகைதானே என பொதுப் பார்வைக்கு தோன்றும் மருந்து, உளவு நிறுவனங்களின் சதியால் மெல்லக் கொல்லும் விசத்தையே மக்கள் நோய்க்கான மருந்தாக உட்கொள்ளும் நிலை தோன்றுகின்றது.

ஒரு நாட்டைச் சிதைப்பதற்காக, தற்செயலாக நடப்பது போல உளவு நிறுவனங்கள் போரைத் தோற்றுவித்தல், பேச்சுவார்த்தைகளில் உடன்பாடில்லை என்று பொருளாதாரத் தடைகளை ஏற்படுத்துதல், இயற்கையாக விலங்குகள், பறவைகளிலிருந்து தோன்றியன என்று உயிர்க்கொல்லி கிருமிகளை பறவைகளுக்கும், விலங்குகளுக்கும் செலுத்தி, அவற்றின் இறைச்சிகளைச் சாப்பிடுவோருக்கு உயிர்க்கொல்லி கிருமிகளால் நோய்வாய்ப்படச் செய்து, நோய்வாய்ப்பட்டவர்களிடமிருந்து மற்றவர்களுக்கும் பரவச் செய்தல் என்ற சூழ்ச்சியைச் செய்கின்றன.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உலகநாடுகள் உலகைக் காப்பாற்ற வேண்டுமென்ற பகிரங்கப் புரிதல் இருப்பது போல வெளிகாட்டிக் கொண்டு அறிக்கை விடுவதும், ஒன்றுகூடி கலந்துரையாடுவதுமாக நிகழ்வுகள் நடைபெற்றாலும் ஒன்றையொன்று கண்காணித்துக் கொண்டே இருப்பது வெளிப்படையாகவே தெரிகின்றது.

உலகநாடுகளைச் சீரழிப்பதில் மிகப்பெரும் பங்கு வகிப்பது, மக்கள் மத்தியில் பரவச் செய்யும் உயிர்க் கொல்லிக் கிருமிகளேயாகும். இக்கட்டுரைத் தொடரின் முக்கியமான பேசுபொருளாக, உயிர்க்கொல்லி கிருமி பற்றி அதிகக் கவனம் கொள்ள வேண்டியுள்ளது. தனி மனிதனாகட்டும், குடும்பமாகட்டும் மகிழ்ச்சியாகவே அனைவரும் வாழ விரும்புவார்கள்.

நாளாந்த வாழ்க்கைக்கான வருமானம் போதாத போதும், இருக்கிற வருவாயில் வாழப் பழகிக் கொள்பவர்கள் அதன் தாற்பரியம் அறிந்து, இசைவாக்கம் பெற்று, அதிலிருந்து மகிழ்ச்சியையும், அமைதியையும் அடைவார்கள்.

ஆனால், வறுமையுடன் வாழ்பவர்களாக இருந்தாலென்ன, தங்கக் கரண்டியுடன் பிறந்தவர்கள் என்று சொல்லப் படுகின்ற வசதியான வாழ்க்கையை வாழ்பவர்களாக இருந்தாலென்ன நோயின் பிடியில் சிக்கிவிட்டால் அனைத்து மகிழ்ச்சிகளும் அவர்களிடமிருந்து விடுபட்டுப் போய் விடும். எனவேதான் ஒரு நாட்டைச் சீரழிப்பதற்கு இரசாயன ஆயுதங்களை விட, உயிர்க் கொல்லி ஆயுதங்களையே வல்லரசு நாடுகள் பாவிக்கத் தொடங்கியிருக்கின்றன.

குடும்ப மகிழ்ச்சி என்பது, ஒவ்வொரு குடும்பத்திலிருக்கும் தனித்தனி மனிதர்களின் மகிழ்ச்சியைக் கொண்டதே!. எனவே, தனிமனிதர்களின் அமைதியின்மையும், அதன் எதிரொலியாக அரசாங்கத்திற்கு எதிரான கண்டனங்களும், கருத்துகளும் எழும் போது, சிறியது பெரியாதாகத் தோன்றும் கண்டனத் தீ, காட்டையே எரிக்கும் தீ போன்று அரசாங்கத்துக்கு எதிரான பலமான கருத்துகள் ஊடகங்களில் வெளிவரத் தொடங்கும்.

அரசாங்கமொன்று தனது மக்களைக் காப்பாற்றுவதற்காக நோய்க் கிருமித் தொற்றை எப்படிக் கையாள்வது? என்று தெரியாமல் தடுமாறி நிற்கையில், எதிர்க்கட்சியினரும், பொதுமக்களும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு தனது கையாலாகத்தனத்தை காட்டி விட்டது என்று கடுமையான கண்டனத்தை முன் வைப்பார்கள்.

ஒரு நாடு சந்திக்கும் பிரச்சினையை உற்று நோக்குபவர்கள், ஊன்றிக் கவனிப்பவர்கள், பிரச்சினைக்குரிய விடயத்தைப் பற்றித் தொடராகச் சிந்திக்கும் போது, அதன் மூலவேர் எதுவென கண்டறிவார்கள்.

உளவு நிறுவனங்களின் ஒற்றர்கள் அனைத்து நாடுகளிலும் இருக்கிறார்கள். வணிக நிறுவனங்களில் பணி புரிபவர்களாக, பல்துறைசார் நிறுவனங்களில் பணிபுரிவர்களாக இவர்கள் ஊடுருவியிருக்கிறார்கள். குறிப்பாக மருந்துகளை இறக்குமதி செய்வோருக்குள் உளவு நிறுவன ஒற்றர்கள் ஊடுருவியிருக்க அதிக வாய்ப்புண்டு.

உடலிற்கு உதவி செய்யும் நல்ல கிருமிகளை, பாதிப்பேற்படுத்தும் கிருமிகளாக மாற்றக்கூடிய மருந்துகளைப் பரிந்துரைப்பதற்காக மருந்தியல் சம்பந்தப்பட்ட, அத்துறை சார்ந்தவர்களுடன் மருந்துகளை இறக்குமதி செய்வோர் கலந்துரையாடி, தாம் நினைத்ததைச் சாதித்து விடுவார்கள். மருந்துகளை அறிமுகம் செய்யும் முகவர்கள் மருத்துவர்களை அணுகி, பரிந்துரைக்கும் மருந்துகளில் சேர்க்கப் பட்டுள்ள மூலகங்களில் காணப்படும் சிறு வித்தியாசங்கள்கூட உடலிற்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்பதை அறிந்தும், அறியாதவராக மருந்துவர் இருந்த போதும், வேறு வழியின்றி அவரும் அம்மருந்துகளைத் தனது நோயாளிகளுக்கு பரிந்துரைக்கிறார். என்னென்ன மருந்துகள், எந்தெந்த நோய்க்கு எழுதப்பட வேண்டும் என்பதை, மருத்தவர்களைச் சந்திக்கும் முகவர்கள் பரிந்துரைக்கிறார்கள்.

மருந்துக் கடைகளுக்கு முகவர்களால் விற்பனை செய்யப்பட்டிருக்கும் மருந்துகளையே மருத்துவர்களும் எழுதுவார்கள். இத்தகுச் சூழலில் மக்களைப் பாதிக்காத மருந்து, எது நல்ல மருந்து? என்பதை உள சுத்தியுடன் கண்டறிவதற்காக அரசாங்கங்கள் மிகக் கவனமாக இருக்கின்றன.

மருந்து உறபத்தி செய்வோரிலிருந்து, பல தொடர்புகளைக் கடந்து ஒரு நாட்டிற்குள் மருந்துகள் வந்தடையும் வரை, தவறான மருந்துகளை பரிந்துரைப்பதற்காக இக்கட்டுரையில் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல பணம், பெண், பொருள் இலஞ்சமாகக் கொடுக்கப்படுகின்றது.

நோய் தீர்க்கும் மருந்து என்பது, அறம் சார்ந்த செயலாகும். ஆனால், இன்று அது மனிதர்களின் உயிரை விலைபேசும் வணிகமாக மாறிவிட்டது. உளவு நிறுவனங்கள் பல ஆண்டுகளாக நோய்க்கிருமித் தொற்றை ஏற்படுத்தி வருகின்றமையை, பொதுமக்களால் அறிந்து கொள்ள முடியாத நிலையிலிருந்து இன்று பரவலாக அதுபற்றி அறிந்து கொள்ளும் நிலை தோன்றியுள்ளது.

(தொடரும்)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப் போரும், கற்றுக்கொண்ட பாடங்களும்

ஒரு லிட்டர் தேனைக் கொண்டு ஒரு தேனீ உலகை பலமுறை சுற்றி வந்துவிடும். மனித மூளை மிகக்குறைந்த அளவு சக்தியைக் கொண்டு, பல கணிப்புகளில் பலமடங்கு அதிக சக்தியை உள்வாங்கும் கணினியைவிட வேகமாகவும், சிறப்பாகவும் கணிக்கிறது. இத்தனைக்கும் தேனீயையோ, மனிதனையே யாரும் திட்டமிட்டு உருவாக்கவில்லை.

இதற்கு அடிப்படைக் காரணம் பரிணாமம்தான். பரிணாமப் போட்டியில் யார் சக்தியை சிக்கனமாகப் ***(Efficient)*** பயன்படுத்துகிறார்களோ, அவர்கள் வெல்வதற்கு வாய்ப்புகள் கூடுகிறது. ஈழப்போரில் புலிகளின் பொருளாதார பலம் சிங்களத்தைவிட பலமடங்கு குறைவாக இருந்தும், அவர்களை பலமுறை தோற்கடித்து வெற்றி கண்டத்திற்கு புலிகளின் சிக்கனம் முக்கிய காரணம்.

இறுதிப்போரில் புலிகளின் பொருளாதாரம் உலகத்தால் பெரும்பாலும் முடக்கப் பட்டதால்தான் அவர்களால் ஈடுகொடுக்க முடியவில்லை. முடிவில் ஒர் அமைப்பின் அல்லது உயிரின் வெற்றிக்கு அடிப்படையாக இருப்பது அவ்வமைப்பின் உபயோக ஆற்றல்.

உபயோக ஆற்றல் = சிக்கனம் $x$ கிடைக்கும் ஆற்றல்

## சிக்கனமாக இயங்கி வாய்ப்புகளைப் பெருக்கும் இயக்கமே வெற்றி பெறும்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக ஓர் இயந்திரம் 60% சிக்கனமாக 100 வாட்சு ஆற்றலைப் பயன்படுத்தினால், அதன் உபயோக ஆற்றல் 60 வாட்சு. மீதம் 40 வாட்சு வீணடிக்கப்பட்டது..

ஓர் அமைப்பு வெற்றி பெற சிக்கனமாகவும் இருக்கவேண்டும், அதன் பொருளாதாரத்தையும் வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். உலகில் ஒரு நாட்டின் ஆற்றல் உபயோகத்தை வைத்தே, அதன் பலத்தை கணக்கிட்டு விடலாம். இது ஏனென்றால் வெப்ப இயக்கவியலின் இரண்டாம் விதிதான் ***(Second Law of thermodynamics)*** பரிணாமத்திற்கே அடிப்படையானது. இதைப் பற்றிய விளக்கத்திற்கு நான் எழுதிய இன்னொரு கட்டுரையைப் பார்க்கவும்.

***"Winning Darwin's game happens to be about dissipating more than your competitor."***

பரிணாமப் போட்டியில் வெல்ல எதிரியைவிட அதிக ஆற்றலை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். அதை எப்படிச் செய்வது? இரண்டாம் விதியிலிருந்து வரும் இன்னொரு முக்கிய கருத்து என்னவென்றால் ஆற்றலுக்கும், அறிவுக்கும் உள்ள நேரடித் தொடர்பு. உதாரணமாக உங்களுக்கு பங்குச் சந்தையில் எந்த பங்குகள் நாளை உயரும்? என்று உங்களால் சரியாகக் கணிக்க முடிந்தால், அந்தத் தகவலைப் பணமாக (ஆற்றலாக) மாற்றி விடலாம். நாம் பள்ளிகளில் போட்டிபோட்டு பிள்ளைகளைக் கற்க வைப்பதற்குக் காரணமும் இந்த அறிவுக்கும், ஆற்றலுக்கும் உள்ள தொடர்புதான். இந்தத் தொடர்பினால் பல அறிவியலாளர்கள் "தக்கது எஞ்சும்" என்ற டார்வினின் தத்துவத்தை "அறிவுடையது எஞ்சும்" என்று மாற்றிக் கூறுகின்றனர்.

***"The old Darwinian view of survival of the fittest is now being cast aside in some quarters in favor of the new view of survival of the best informed." - Jeremy Rifkin***

உலகில் முன்னேறிய நாடுகள் அறிவிலும் முன்னேறி இருப்பதற்கு இதுதான் காரணம். அறிவு இல்லாமல் இவ்வுலகில் எதிலும் முன்னேற்றம் ஏற்படமுடியாது. ஒரு வாழ்வின் உயிருக்கும் அறிவுதான் அடிப்படையானது.

புலிகள் கிடைக்கும் ஆற்றலை மிகச்சிக்கனமாக பயன்படுத்தியதினால்தான், பலமடங்கு பொருளாதார பலம் வாய்ந்த சிங்களத்தை பலமுறை புலிகளால் விரட்ட முடிந்தது. புலிகள் எவ்வாறு சிக்கனமாக செயல்பட முடிந்தது? அவர்கள் அதற்கு எவ்வாறு அறிவைப் பயன்படுத்தினார்கள்? அதற்கு எது மாதிரியான உத்திகள் பயன்படுத்தப்பட்டன? அதிலிருந்து தமிழ்த் தேசியம் என்ன கற்கலாம்? என்று ஆராய்வதுதான் இக்கட்டுரையின் நோக்கம். புலிகளின் பொருளாதாரம் இக்கட்டுரையின் நோக்கமில்லை.

ஒரு பக்கம் திறந்த, ஆனால் மூன்று பக்கம் கண்ணாடி சுவர்களால் கட்டப்பட்ட ஒரு அறையில் ஒரு கோழியை விட்டு, அதற்கான உணவை கண்ணாடிக்கு அந்தப்பக்கம் வெளியே வைத்தால் அந்த கோழி என்ன செய்யும்? அது கண்ணாடி சுவற்றை முட்டிக்கொண்டு வலதும், இடதுமாக நடந்து கொண்டிருக்கும். முன்னால் இருக்கும் இலக்கை அடைய அது பின்னோக்கி சென்று சுற்றி அடைய வேண்டும். ஆனால், கோழிக்கு இது முடியாத காரியம். இந்த இரு அச்சு சிக்கலை (இடது-வலம், முன்-பின்) நமது நான்கு வயது குழந்தை எளிதில் தீர்த்துவிடும். ஆனால், உணவுக்குப் பதிலாக பொம்மையை வைக்கவேண்டும் என்பது வேறு விடயம்.

உத்திகளில் ஓர் அடிப்படைத் தத்துவம் என்னவென்றால், சடுதியான வெற்றிக்கானப் பாதை என்பது இவ்வாறு சுற்றிவரும் நீண்ட பாதையாகவே இருக்கும். நேரான பாதை எதிரிக்கு நன்றாகவேத் தெரியும், அதை மறித்துதான் நின்றுகொண்டிருப்பான். நம்மால் இரு அச்சு சிக்கலை எளிதாகத் தீர்த்துவிடுவோம். ஆனால், மனித சமூகம் எதிர்நோக்கும் சிக்கல்கள் பல-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுக்களைக் கொண்டது. அவ்வாறான சிக்கல்களை எதிர்நோக்கும் பொழுது, எளிதான பாதையைக் கண்டுபிடிக்க முடியாமல் நாம் கோழியைப் போல முட்டிக்கொண்டு நிற்போம்.

உதாரணமாக ஈழம் அடைய என்ன செய்யவேண்டும் என்றால், இதுதான் என்று ஒன்றை சொல்லிவிட முடியாது. பல செயல்பாடுகளை செய்யவேண்டும். ஒரே நேரத்தில் வெவ்வேறு அளவில் செய்யவேண்டும். காலத்திற்கேற்ப, எதிரிகளின் நடவடிக்கைக் கேற்ப உத்திகளும் மாறிக்கொண்டே இருக்க வேண்டும். வெற்றிக்கானப் பாதையை முன்பே அறியமுடியாது. அந்தப்பாதையை பல-அச்சுகளைக் கொண்ட உத்திகளில் ஒவ்வொரு எளிதான அடியாக எடுத்து வைத்து பரிணமித்துதான் அடைய வேண்டும்.

இதை விளக்குவதற்கு நல்ல உதாரணம் சதுரங்க ஆட்டம்தான். ஓர் ஆட்டக்காரர் முதலிலேயே இப்படித்தான் வெற்றியடைவேன் என்று முழுதாக திட்டம் தீட்ட முடியாது. எந்த ஒரு திட்டமும் எதிரியின் ஒரு சில நகர்வுகளிலேயே மாறிவிடும். ஆட்டம் என்பது 16-அச்சுகள் (16-காய்கள்) கொண்ட சிக்கல். இந்த 16-காய்களைப் புத்திசாலித்தனமாக நகர்த்தி வெற்றி கொள்ளவேண்டும். அதை ஒவ்வொரு நகர்த்தலாக செய்துதான் வெற்றிக்கான பாதையைப் பரிணமித்து அடைய முடியும். இங்கு முக்கியமான கேள்வி, ஒவ்வொரு நகர்த்தலையும் தீர்மானிக்கும் உத்தி என்ன? என்பதுதான்.

இதற்கான விடை எந்த நகர்த்தல் எதிர் கால நகர்த்தலுக்கு அதிக வாய்ப்புகளை அளிக்கிறதோ, அதுதான் வெற்றிக்கான நகர்த்தல். அடிப்படையில் வெற்றியைத் தீர்மானிப்பது வாய்ப்புகளின் எண்ணிக்கையே. இதை ஏற்கனவே பாகம்-3இல் பார்த்திருந்தோம். இதுதான் உத்திகளின் மையக் கருத்து.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்ன கொடுமை சரவணா!...



கல்லெறி வேலுப்பிள்ளை

**வணக்கம் பாருங்கோ, எப்பிடி சுகமா இருக்கிறியளே...?**

**நான் ஏதோ இருக்கிறன் பாருங்கோ. உந்தக் கோதாரி விழுந்த கொரோனா போட்டு ஆட்டிச் சீரழிச்சுப்போட்டுது. எனக்கொண்டும் நடக்கேல்லை, ஆனால், ஊரெல்லாம் இதே கதைதானே பாருங்கோ. எதையும் எவரும் போகும்போது கொண்டுபோக ஏலாது எண்டதுக்கு கொரோனா நல்ல பாடம் கண்டியளோ. வீதியில சேர்ந்தே போக ஏலாது எண்டாப் பாருங்கோவன்.**

எது எது எப்பிடி இருந்தாலும் தமிழன் அடங்குவது இல்லை கண்டியளோ. உதெல்லாம் எங்களுக்குப் பெரிய விசயம் எண்டு நெஞ்சை நிமித்திக்கொண்டு ஆடுவாங்கள் கண்டியளோ. அதால தான் உந்த நோய் எங்களை ஒண்டும் செய்யாது எண்டு சொல்லிக்கொண்டு ஆடுறாங்கள். அதிலையும் பாருங்கோ எங்கட புத்திசிகாமணிக் கூட்டங்கள் பல உதையே சாட்டா வைச்சு உழைப்பும் நடத்துகினம் பாருங்கோ. அந்தக்கொடுமையைத்தான் எங்க போய் சொல்லுறதெண்டு தெரியேல்லை. தமிழன் விதம் விதமாக் காசு பாக்குறதிலை வலுகெட்டிக்காரர் பாருங்கோ.

நூதனமான உழைப்புகள் மூலமாக காசு சேர்த்து வட்டிக்குக் கொடுத்து அதில வாழுற ஆக்களில தமிழர்கள் பெரும் சாமர்த்தியசாலிகள் பாருங்கோ. அப்பிடி வீடு வாசல் சொத்து எண்டு சேர்த்து, கடைசியா நோய்கொண்டு போய்ச் சேர்த்த ஆக்கள் பலர் பாருங்கோ. அப்பிடித்தான் இப்பவும் நடக்குது. இதில இருந்து என்ன தெரியுது எண்டா, எங்கட ஆக்கள் யாருக்கும் பயப்பட மாட்டாங்கள் எண்டதுதான் பாருங்கோ. என்ன நான் ஒரே திட்டுறன் எண்டு யோசியாதேங்கோ. நான் சொல்லி முடிய நீங்களும் திட்டவேண்டிய நிலை வரக்கூடும் கண்டியளோ. அவ்வளவு கொடுமைகள் எல்லாம் எங்கட சமூகத்தில நடக்குது எண்டா பாருங்கோவன்.

என்னெண்டாப் பாருங்கோ, நான் கிட்டடியில எனக்குத் தூரத்து உறவான ஒருவரின்ர ஈமக்கிரியைகளுக்குப் போயிருந்தன் பாருங்கோ. அவர் இறந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலநாட்களுக்குப் பிறகுதான் பார்க்கவே அனுமதிச்சவை. அதுவும் நோய்த்தொற்றுக் காரணமாக எல்லாரையும் அனுமதிக் கேல்லை பாருங்கோ.

கடைசியா பதினைஞ்சு பேர் வரலாம்எண்டு அனுமதி தந்திச்சினம். ஆனால் எல்லாரும் ஒரே தரத்தில உள்ளுக்க போகேலாது எண்டதால, கொஞ்சப் பேர் உள்ளுக்கு நிக்குறதும் பிறகு வெளியில நிக்குறதுமா போச்சுது பாருங்கோ. ஆனால் நான் அவருக்கு கொஞ்சம் நெருக்கமான ஆள் எண்டதால என்னை உள்ளுக்கு நிக்க அனுமதிச்சிருந்தினம். சரியென்று நானும் அதில வந்துபோற ஆக்களை ஒழுங்காக்குறது, எடுபிடி வேலைகளை செய்யுறது எண்டு ஏதோ செய்துகொண்டு நிண்டன் பாருங்கோ.

திடீரெண்டு ஐயர் வாறார், ஐயர் வாறார் எண்டு சொல்லிக்கொண்டு ஒராள். நான் நினைச்சன் யாரோ பூணூல் போட ஆசாமி வாறார் எண்டுபோட்டு இருந்திட்டன். பார்த்தால் அது ஒரு சாதாரண ஆசாமி பாருங்கோ. வந்த உடன அது தயாரோ இது தயாரோ எண்டு கேட்டுக் கொண்டு ஆள் எல்லாரையும் பதட்டப் படுத்திக் கொண்டு நிண்டுது பாருங்கோ.

இதென்னடா புதுக்குழப்பமாக் கிடக் கெண்டு நான் பார்த்துக்கொண்டு நிண்டன். ஏனெண்டால் வழமையா பூணூல் போட்ட ஐயர் வந்து இதுகளைச் காரியங்களைச் செய்யுறதாகக் கேள்வி. இப்ப சிலநேரம் அவை பூணூல் பாரமெண்டு போடுற தில்லையாக்கும் எண்டு நினைச்சன்.

“ஐயா இப்ப தொடங்கப்போறன்” எண்டு தனக்குத்தானே கட்டளையிட்டுக் கொண்டு ஆரம்பிச்சார் பாருங்கோ. முதலில ஏதோ மந்திரம் பெருசாச் சொல்லுவாராக்கும் எண்டு நான் பாத்துக் கொண்டிருக்க, வாய் அசையுதே தவிர ஒரு சத்தமும் வரேல்லை. சில நேரம் நோய்த் தொற்றால சத்தம் வெளியில வருக்குதில்லையோ எண்டு யோசிச்சன். பிறகு பாத்தால், கையைத் தூக்கி ஏதோதோ சொன்னார் பாருங்கோ. அதுவும் விளங்கேல்லை. இடையில ஆளுக்கு வேறொரு அழைப்பு தொலைபேசியில் வர எழும்பிப் போய் தள்ளி நிண்டு கதைச்சார் பாருங்கோ.

அதாவது இன்னொரு ஈமக்கிரியைக்கு அழைப்பு வந்திருக்கு. “...ஓம் வளர்பிறை நாலாம் நாள் செய்யுறேல்லை, ஐயா சொல்லுறத்தைக் கேளுங்கோ, அந்த நாளில ஆத்மா








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாந்தியடையாது, ஐயா வேற நாள் சொல்லுறன்..." எண்டு நீட்டி முழக்கிக் கதை போகுது பாருங்கோ.

ஆளைப்பார்த்தால் கதைக்கிற மாதிரி இல்லையுங்கோ, எதிர்முனையில கதைக்கிற சீவனை வெருட்டிப் பணிய வைக்குற மாதிரிக்கிடந்துது கண்டியளோ. ஒரே நாளில இரண்டு ஈமக்கிரியைக்கு அழைப்பு வந்திட்டுது போல கிடக்கு. ஆள் திகதியை மாத்தி எடுக்குது எண்டு எனக்கு விளங்கீட்டுது. மற்றது என்னெண்டா பாருங்கோ அண்டைக்கு பவுர்ணமி நாள், பிறகு எப்பிடிப்பாருங்கோ வளர்பிறை அடுத்த கிழமை வரும்..? ஆனால் உதையெல்லாம் அந்த நேரம் வெளியில சொல்ல ஏலாது தானே பாருங்கோ. அதால பேசாமல் இருந்திட்டன்.

தொலைபேசி அழைப்பை முடிச்சுக் கொண்டு திரும்பவும் வந்து ஆள் இருந்திட்டுது. இருந்தால், சுண்ணப் பாட்டுக்கு முதல் பாடவேண்டிய தேவாரம் என்னவெண்டு அதில நிண்ட இன்னொரு ஐயா கேக்க,.. "அது என்னவெண்டாலும் பாடுங்கோ, பாலும் தெளிதேனும் பாடலாம்.." எண்டு இந்தத் திடீர் ஐயா சொல்லுறார் பாருங்கோ. சுண்ணப் பாட்டுக்கு முதல் வெண்பா பாடுறது எந்த ஊர் வழக்கம் எண்டு தெரியேல்லை பாருங்கோ. எல்லாம் செத்த வீட்டில பிரச்சனை பண்ண மாட்டாங்கள் எண்ட துணிவு தான் பாருங்கோ.

ஒருமாதிரி சுண்ணப்பாட்டுப் பாடி, கடைசியா முன்னையிட்ட தீ முப்புரத்திலே எண்டு முடிக்க, ஆளும் தன்ர அலுவலை முடிச்சுப் போட்டு, நான் வெளிக்கிடப் போறம் எண்டு சொல்லிச்சுது. சாதாரணமா சைவ, சமண முறைகளின் படி ஈமக் கிரியைகள் செய்யுற ஆக்கள், உடலம் தகனத்துக்குப் போக முதல் வெளிக்கிட மாட்டினம். சரி அது இந்த நாடுகளில் சாத்தியமில்லை பாருங்கோ. ஆனால், நெற்றிக்காசு வைச்சு வாய்க்கரிசி போட முதல் உடன வெளிக்கிடுற ஆக்களைப் பல








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களிலே கண்டிருக்கிறேன் பாருங்கோ.

இவரின்ர கூத்துகளைப் பற்றி நான் என்ர நண்பருக்குச் சொல்லக்கொண்டு வந்தன் பாருங்கோ. என்ர நண்பருக்கு உந்தத் திடீர் ஐயாவை ஏற்கனவே தெரியுமாம். அதோட வேற ஒரு குண்டையும் தூக்கிப்போட்டார் பாருங்கோ என்னுடைய நண்பர்.

என்னவெண்டாலாம்; உந்தத் திடீர் ஐயர் நவீனத்துக்கு ஏற்ற மாதிரி தொலைத் தொடர்பில எல்லாம் ஈமக்கிரியை செய்யுறதில வல்லவர் எண்டா பாருங்கோவன். அதாவது, நோய்த்தொற்றுக் காலம் எண்டதால அயல் நாடுகளுக்கு போக ஏலாத சூழ்நிலைகளில, தொலைபேசி, இஸ்கைப், வைபர் ஊடாக கிரியைகள் செய்யுறாராம். அதாவது நேர்ல வந்தால் 500 யூரோ எண்டால், தொலைத் தொடர்பில செய்தால் 250 யூரோவாம். எட, கொள்ளையில போவாரே, எப்பிடி எல்லாம் காசு தேடுறாங்கள் எண்டு பாத்தியளே..? செத்த மாட்டில உண்ணி புடுங்குறது எண்டுறது உதுதானோ..?

ஈமக்கிரியைகள் செய்யுறதுக்கு வளர்பிறை தேய்பிறை தேவையில்லை எண்டுறது கூடத் தெரியாட்டில், எங்கடையளை எப்பிடியும் ஏமாத்தலாம் தானே பாருங்கோ. அதுவும் பாருங்கோ, இறந்தவருக்கான இறுதிக்கிரியைகள் செய்ய இவ்வளவு தாங்கோ எண்டு கேட்டுச் சொல்லுற வழக்கம் ஊரில கிடையாது பாருங்கோ.

அப்பிடிக் காசு கேக்கிறதே தப்பு எண்டு சொல்லி, இறந்தவரின் உறவினர்கள் குடுக்கிறதை தானமாகப் பெறுவதுதான் வழக்கம் பாருங்கோ. கிரியை முடிஞ்சு போகும் போது, கிரியை செய்தவரை நீர்தெளித்து வாசல்வரை கொண்டு சென்று அனுப்பும் வழமையும் இஞ்ச இல்லாமல் போட்டுது கண்டியளோ.

ஏனெண்டால் அதைத் தரக்குறைவா நினைக்கினமாம் உந்தத் திடீர் ஐயாக்கள். கொள்ளிவைக்க முதல் இவ்வளவு தா எண்டு கேட்டு வாங்கத் தெரிஞ்ச திடீர் சாமிகளுக்கு, தண்ணீர் தெளிச்சு வழியனுப்பி வைக்கிறதில மட்டும் என்ன தரக்குறைவு எண்டு விளங்கேல்லை பாருங்கோ. சும்மா ஏதோ வாய்க்குள்ள முணுமுணுத்துப் போட்டு, இறந்தவரின்ர முகம் முழுக்க மஞ்சளை அப்பி, அரிசியை அள்ளிக் கொட்டி ஏதோ வாய்க்குள்ள புசத்தினாப் போல தன்னை எவனும் கவனியான் எண்ட எண்ணத்தில திரியினம் பாருங்கோ.

தலைமாட்டில ஒற்றை விளக்கு மட்டும் தான் ஏத்துறது எண்டதும் தெரியேல்லை. தண்ணி தெளிக்கிற மாவிலை தலைகீழா பிடிக்கிறது எண்டதும் தெரியேல்லை, கிரியையில வெண்பா பாடக்கூடாது எண்டும் தெரியேல்லை, பெட்டிமூட முதல் பாக்குற ஆக்களுக்குள்ள, தலைப்பிள்ளை மட்டும்தான் கடைசியா பாக்கலாம் எண்டுற ஊர் வழமையும் தெரியேல்லை. ஆனா நான் ஐயா எண்டு கூத்தாடுற உந்த கொய்யாக்களை என்ன செய்யுறதெண்டு விளங்கேல்லை பாருங்கோ.


அவங்களில மட்டும் பிழையில்லைக் கண்டியளோ, ஐநூறு கேட்டால் என்ன ஏதென்று கேளாமல் ஆயிரம் கொடுக்கிற எங்கட ஆக்கள் இருக்கும் வரை இஞ்ச எவனும் அடங்கப்போறதில்லை கண்டியளோ.

**"சத்தியம் தவறாத**
**உத்தமன் போலவே நடிக்கிறார்**
**சமயம் பார்த்துப் பல வகையிலும்**
**கொள்ளை அடிக்கிறார்**
**பக்தனைப் போலவே பகல் வேசம் காட்டி**
**பாமர மக்களை வலையினில் மாட்டி**
**எத்தனை காலந்தான் ஏமாற்றுவார்**
**இந்த நாட்டிலே..."**

- அப்ப வரட்டே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Swiss Life
Select

சுவிஸ் நாட்டில் உங்கள் காப்புறுதித் தேவைகளுக்காக கணக்கற்ற முகவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆனால், காப்புறுதி விபரங்களை முறையாகப் பயின்று, மனசாட்சிக்கு விரோதமில்லாமல் பணியாற்றுவோர் ஒரு சிலரே...! அவர்களுள் ஒருவர் உங்கள் திலீபன்.

## சுவிசில் சொந்த வீடு வாங்க
## விரும்பும் உறவுகளே!

**அவதானமாகச் செயற்படுங்கள்.**

உங்கள் கடனுக்காக வட்டி வீதம் எப்போதும் அதிகரிக்கக் கூடும். எனவே, சரியான வங்கியையும், வட்டி வீதத்தையும் தெரிந்து கொள்ளுங்கள். உங்கள் வாழ்வின் சகல அம்சங்களிலும் உங்களோடு கரங்கோர்க்கும் ஒரேயொரு நிறுவனம்

**அறிவு • நேர்மை • நாணயம்**

தனியொரு காப்புறுதி நிறுவனத்தின் முகவரல்ல நாம். உங்கள் தேவைக்கு ஏற்ப தகுந்த நிறுவனத்தில் நாம் காப்புறுதி செய்து தருகிறோம்

**Sägestrasse 79**
**3098 Köniz**

**Telefon: 031 915 00 50**
**Telefax: 031 915 00 60**
**Handy: 079 889 60 65**

email : krishnasamy.thileepan@swisslife-select.ch
internet : www.swisslife-select.ch

Cicero Member ID 15787
www.cicero.ch

**So fängt Zukunft an.**



Herr Krishnasamy THILEEPAN
Dipl.Finanzberater IAF
















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஈழத்தமிழர்கள் சிறுபான்மையினர் அல்ல

தனிநாடு கேட்டுப் போராடுகிறீர்களே!, தமிழர்கள் வெறும் 8% (2001 மதிப்பீடு) தானே இருக்கிறீர்கள்..? என்றொரு கேள்வி பலரிடத்திலிருந்து வருகிறது. (முதலில் கேள்வியே தவறு) பலர் வெளிப்படையாகக் கேட்கிறார்கள், சிலர் தமக்குள்ளே வைத்துக்கொண்டு அலைகிறார்கள்.

ஒருபோதும், தனிநாடு கேட்டுத் தமிழர்கள் போராடவில்லை. இழந்த மண்ணை மீட்கப் போராடுகிறார்கள். உண்மையில் சிங்களம்தான் தனிநாடு கேட்டுப் போராடுகிறது. இப்பொழுது கிழக்கு இசுலாமியர்களும் அந்நிலைக்கு வந்துவிட்டார்கள். தமிழர்கள் (வழிபாட்டு முறைமையில் நாகர்கள், இயக்கர்கள்) தனிநாடு கேட்டுப் போராடியதில்லை. உண்மையில் முழு நாடுமே அவர்களுடையது தான்.

மகாவம்சம் யாரைக் கொண்டாடுகிறது..? சங்கமித்தையையும், மகிந்தவையும் (சங்கமித்தையோடு வந்தவர்) முழுமுதற் தூதர்களாகக் கொண்டாடுகிறது. அந்த மகாவம்சத்தைச் சிங்களர் கொண்டாடுகிறார்கள்.

சங்கமித்தை இலங்கைக்கு வருவதற்கு முன் இந்தியாவின் தென்கோடியில் (தமிழகத்தில்) தங்கியிருந்து கோகர்ணம் (இலங்கை) பற்றிக் கேட்டறிந்தாகவும், அங்கே பேசப்படும் மொழிக்கும், பாளி மொழிக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென்று அறிந்து, அப்போது அங்கே பேசப்பட்ட மொழியைத் தமிழ் நாட்டில் இருந்து கற்றபின்பே இலங்கை வந்ததாகவும் சொல்லப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நேரத்தில் பௌத்தத்தை தமிழ்நாட்டிலுள்ளவர்களும் ஏற்றுக் கொண்டு வழிபட்டிருக்க வாய்ப்பிருக்கிறது. அதனால்தான் சங்கமித்தை தமிழ்நாட்டில் வந்து தங்கியிருக்கும் வாய்ப்பு எட்டியிருக்கிறது. இராச இராச சோழன் காலம்வரை இது நீடித்திருக்கிறது. ஆனைமங்கலச் செப்பேடுகள் ***(The large leiden plates).*** முதலாம் இராசராச சோழன், கடார வேந்தனாகிய மாரவிசயோத்துங்க வருமன் நாகப்பட்டினத்தில் 'சூடாமணி வரும விகாரம்' என்னும் புத்த விகாரைக் கட்டுவதற்குப் பேருதவி புரிந்ததுடன், ஆனைமங்கலம் என்னும் கிராமத்தினையும் பள்ளிச் சந்தமாக அளித்தான்.

அப்புத்த விகாரம் இராசேந்திரனது காலத்தில் முடிவுற்றதால், இவன் தன் தந்தையின் அறக்கட்டளையைச் செப்பேடுகளில் தீட்டியளித்துள்ளான். இதுவே ஆனைமங்கலச் செப்பேடு எனவும் 'லீடன் பட்டயங்கள்' எனப்படும் இச்செப்பேடுகள் ஹாலந்து நாட்டின் பொருட்காட்சி சாலையில் உள்ளமையால் இவை லீடன் செப்பேடுகள் என அழைக்கப்படுகின்றது. இத்தொகுதியில் இருபத்தொன்று செப்பேடுகள் உள்ளன.

தமிழ்நாட்டிலிருந்து சங்கமித்தை தமிழ்மொழியைத் தவிர வேறெதுவும் கற்றிருக்க வாய்ப்பில்லை. தமிழ்நாட்டிலிருந்த சங்கமித்தை இலங்கை செல்வதற்காகச் சிங்களம் கற்றிருக்கக்கூடும் என்று யாராவது "முரட்டுச் சிங்கமாக" வந்து விவாதம் வைத்தாற்கூட, அப்படியானால் இலங்கையில் அந்நேரம் சிங்களமே இல்லையென்று தானே பொருள். ஆதலால் சிங்களம் அப்போது "கடல்லயே" இல்லை.

சங்கமித்தை இலங்கை வந்தபொழுது, அவர் சந்தித்த அப்பகுதி அரசனின் பெயர் தேவநம்பியதீசன் என்பதாகும். இலங்கை சிங்கள அரசாக இருந்திருந்தால், பெயர் இவ்வாறு இருந்திருக்க வாய்ப்பில்லை. பின்னர் அவன் தனது பெயரை "தேவ நம்பிய திஸ்ஸ" என்று மாற்றிக் கொண்டான்.


**Dortmund மாநகரில்....**

# தமிழர் அரங்கம் கல்விக் கூடம்




**யேர்மன் மொழி வகுப்புகள்**

அடிப்படையில் இருந்து பயிற்றுவிக்கப் படுகிறது. யேர்மன் குடியுரிமை பெற விரும்புபவர்களுக்கு நல்வாய்ப்பு



**Nachhilfe வகுப்புகள்**

பாடசாலை மாணவர்களுக்கானது



**தமிழ் மொழி வகுப்புகள்**

தமிழ் மொழி வகுப்புகளுக்கு கட்டணம் இல்லை



**பரதநாட்டிய வகுப்புகள்**

டோட்முண்ட மற்றும் ஒபகவுசினில் நடைபெறுகின்றன

**Rheinische Str 76-80, 44137 Dortmund**

**0151 633 633 33, 0231 950 979 00**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பொழுதும் பாளிமொழி இலங்கையில் திரிபடைய ஆரம்பிக்கவில்லை. இயக்கர்கள் மற்றும் நாகர்கள் தம்மைக்கேயுண்டான "குழும மொழியினைப்" பேசிக் கொண்டார்கள். குழும மொழியின் அடிப்படை என்பது "நாகரிகமுறாத மாந்தர்கள் எழுப்பும் ஒலி" என்பதே பொருள். தமிழகமும், இலங்கையும் கடலால் பிரிக்கப்படாத நிலையிலிருந்த பொழுதிலேயே தமிழ்மொழி பேசப் பட்டிருக்கிறது.

அவுசுத்திரேலியா நாட்டில் வெள்ளையர்கள் ஆதிக்கம் செலுத்திய பிறகு, அந்தநாட்டில் வாழ்ந்த பழங்குடியினரை அடிமைகளாக்கிக் கொண்டார்கள். அவர்களை அழித்தார்கள். இப்போது பெரும்பான்மை மக்கள் வெள்ளையர்கள் என்பதற்காக, அந்த நாடு அவர்களுக்குச் சொந்தமானதா? அவ்வாறே அமெரிக்காவின் பூர்வகுடிமக்களான செவ்விந்தியர்களை அங்கு குடியேறிய வெள்ளையர்கள் அழித்தார்கள். இப்போது செவ்விந்தியர்களின் வம்சமே அரிதாகி விட்டது. அந்த நாட்டின் சிறுபான்மையினர் அவர்கள் என்பதற்காக அந்த நாடு அவர்களுக்குச் சொந்தமில்லை என்று ஆகிவிடுமா..?

ஈழத்திலும் இவ்வாறே நடந்தது. தமிழர்கள் அழிக்கப்பட்டார்கள், நாட்டை விட்டு அகதிகளாக வெளியேறினார்கள், இனக்கலப்புச் செய்யப்பட்டார்கள். இப்போது நாம் சிறுபான்மை ஆகிவிட்டோம். வடக்கு கிழக்கில் வெறும் 8 சதவீதம் தமிழர்களே இருப்பதாகவும், அதிகாரமில்லை என்றும் சொல்லும் சிங்கள அரசு, ஏற்கனவே கொல்லப்பட்ட தமிழ் மக்களையும், நாட்டை விட்டு வெளியேறிய மக்களையும் கணக்கில் சேர்த்துக் கொள்ளாமல் சிறுபான்மை என்ற சொல்லையும், வீதத்தினையும் குறிப்பிடுவது திட்டமிட்ட இனஅழிப்பு நோக்கிலேயே ஆகும்.

தமிழர்கள் சிறுபான்மை என்ற சொல்லையே இனி உபயோகப்படுத்தக் கூடாது என்பதிலிருந்து எமது மாற்றம் உருவாக வேண்டும்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காப்புறுதி!

மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் அடுத்தடுத்த கட்டில்களில் படுத்திருந்தனர் தொழிலதிபர் பரந்தாமனும், இன்சூரன்ஸ் ஏஜெண்ட் கோபாலனும்.

இருவரும் தொழில் ரீதியாக மட்டுமல்ல, சிறு பராயத்தில் இருந்தே நண்பர்கள். ஒரே அயல், அருகருகான வீடுகள்... பள்ளிக்கூடத்தில் இருந்து பாடசாலை வரை ஒன்றாகப் படித்தவர்கள். அவையெல்லாம் யதார்த்தமாக அமைந்தவை. ஆனால், இன்று ஒரே வைத்தியசாலையில், ஒரே அறையில் நோயாளிகளாகப் படுத்திருப்பது!!?

பரந்தாமனின் குடும்பம் சாதாரணமான ஒரு நடுத்தரக் குடும்பம்தான். தந்தையார் சின்னச்சாமி வீட்டிலேயே மரச் செக்கு ராட்டினம் மூலமாக எள்ளில் இருந்து எண்ணெய் தயாரித்து, வீதி வீதியாகக் கொண்டு திரிந்து விற்பனை செய்து வருபவர். அவருடைய தொழிற்சாலையில் முதலாளியும் அவர்தான், தொழிலாளியும் அவர்தான்.

விவசாயிகளிடம் சென்று தனது வசதிக்கேற்றவாறு எள்ளைக் கொள்முதல் செய்து வந்து, அதை எண்ணெயாக்கி, பின்னர் அதை போத்தல்களில் நிரப்பி, வீதி வீதியாகக் கொண்டு சென்று விற்பனை செய்து, தன் குடும்பத்தை நடத்தி வரும் சின்னச்சாமி, தன் மகன் பரந்தாமன் தன்னைப் போல கஸ்ரப்படாமல், அரசாங்க உத்தியகம் பார்த்து மாத வருமானம் பெறுபவனாக வாழ வேண்டும் என்ற கனவோடு மகனைப் படிப்பித்து வந்தவர்.

ஆனால், திடீரென ஒருநாள் மாரடைப்பால் சின்னச்சாமி இறந்துவிட, வீட்டின் நிர்வாகத்தை பொறுப்பேற்க வேண்டிய கட்டாய சூழ்நிலைக்குத் தள்ளப்பட்ட பரந்தாமன், தந்தையார் செய்த அதே எண்ணெய் வியாபரத்தையே செய்யவேண்டிய சூழ்நிலை. ஆரம்பத்தில் வீதி வீதியாகச் சென்று எண்ணெய் விற்பது வெட்கமாகவும், கஸ்ரமாகவும்தான் இருந்தது. ஆனால், வாழ்வதற்கு ஏதாவது தொழில் செய்துதானே ஆகவேண்டும்.

கோபாலனுக்கும் அரசாங்க வேலை எதுவும் கிடைக்கவில்லை. ஒரு காப்புறுதிக் கூட்டுத் தாபனத்தில் முகவர் வேலையில் இணைந்து கொண்டான். சாதாரணமாகவே கோபாலனை "வார்த்தைகளில் மந்திரம் வைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசுபவன்” என்றுதான் எல்லோரும் சொல்வார்கள். பேச்சால் மற்றவர்களை மயக்கிவிடுவான்.

அவனது பேச்சுத் திறமைக்கேற்றபடி வேலையும் கிடைத்ததால், அரசாங்க வேலையில் கிடைப்பதைவிட அதிக வருமானத்துடன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது மட்டுமல்ல, தன்னிடம் காப்புறுதி செய்தவர்களுக்கு நோயோ! அல்லது மரணமோ! ஏற்பட்டால், அவர்களுக்கு எந்தவிதமான சிரமும் ஏற்படாமல் அவர்களுக்குரிய இழப்பீடுகளைப் பெற்றுக் கொடுப்பதால், காப்புறுதி செய்தால் பிற்பாடு பலன் உறுதி என்ற நம்பிக்கையைப் பலருக்கும் ஏற்படுத்தி, தனது தொழிலை விருத்தி செய்து வந்தான்.

பரந்தாமன் சிலரை வேலைக்கு அமர்த்தி, தந்தையின் தொழிலை சற்று விரிவுபடுத்தியவன் காலப் போக்கில் “சின்னச்சாமி நல்லெண்ணெய்” என்னும் பெயரில் ஒரு பெரிய தொழிற்சாலையையே உருவாக்கி விட்டான்.

கோபாலன் நண்பனாக மட்டுமில்லாமல், தொழில் ரீதியாகவும் பரந்தாமனுடன் அடிக்கடி சந்தித்து உரையாடிக் கொள்வது வழமை. பரந்தமன் மட்டுமல்ல, சின்னச்சாமி நிறுவனத்தில் வேலை செய்யும் அனைவரும் கோபாலன் பணிபுரியும் காப்புறுதி நிறுவனத்தின் அங்கத்தவர்கள்தான்.

ஒரு மணி நேரத்திற்கு முன்பாகவும் பரந்தாமனின் ஆயுள் காப்புறுதியை உயர்த்துவது சம்மந்தமாகத்தான் கோபாலனும்,









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்தாமனும் பேசிக் கொண்டு இருந்தார்கள்.

"கோபால் என்னுடைய வயதுக்கு இப்ப இருக்கிற காப்புறுதியே போதும்! கொஞ்சக் காலம் போகட்டும். சாகிற வயது வரட்டும், அப்ப நீ சொல்லுற மாதிரி காப்புறுதித் தொகையை கூட்டலாம்".

"பரந்தாமா! யாரும் தங்கள் வயதைக் கணக்கிட்டுத் தங்களைக் காப்புறுதி செய்வதில்லை! ஒருவருடைய காப்புறுதியின் பெறுமதியை வைத்துத்தான் அவரின் பெறுமதியே கணிக்கப்படுகின்றது!".

"கோபால் நான் ஏற்கனவே ஒரு லட்சம் ரூபா இன்சூரன்ஸ போட்டிருக்கிறேன். இப்ப எனக்கு என்ன சாகிற வயசா? முப்பத்தெட்டு வயதுதானே? இப்ப போட்டிருக்கிற ஒரு லட்ச ரூபாவுக்கான இன்சூரன்ஸ்கூட உன்னுடைய கட்டாயத்துக்காகப் போட்டேனே தவிர, மற்றும்படி நாளைக்கே நான் செத்தா அந்தப் பணம் என் மனைவிக்கு உதவியா இருக்கும் எண்டெல்லாம் செய்யேல்லை! அது மாத்திரமில்லை, இப்ப நீ சொல்லுறபடி பத்து லட்ச ரூபாவுக்குப் போட்டா மாதாந்தம் கட்டுற பணம் ரொம்ப அதிகம்ப்பா! எல்லாம் வீண் செலவுதானே?".

"நான் என்னுடைய தொழிலுக்காகச் சொல்லவில்லை, உண்மையாகச் சொல்லுறன் ஆயுள் காப்பீடு எடுப்பது என்பதே அதிக வருடங்கள் வாழ்வதற்காகத்தான்! என்பது உனக்குத் தெரியுமா?" என்றொரு கேள்வியைக் கேட்க, கோபலனை ஆச்சரியமாகப் பார்த்தன் பரந்தாமன்!.

அந்த இடத்தில் ஒரு இடைவெளி விட்டு, பரந்தாமனின் திகைப்பை ரசித்தபடி விட்ட இடத்தில் இருந்து மீண்டும் தொடர்ந்தான் கோபாலன்.

"நான் இல்லாக் காலத்திற்கென எனது மனைவி பிள்ளைகளுக்கு ஏதாவது சேர்த்து வைக்கவில்லையே என கவலைப்பட்டே பலர் நோயாளி ஆகிவிடுகின்றார்கள்! ஒரு பெரிய தொகைக்குக் காப்பீடு செய்து வைத்தால், நாளைக்கு எனக்கு ஏதாவது ஏற்பட்டாலும் என் குடும்பத்திற்கு நிதிப் பற்றாக்குறை ஏற்படாது என்கிற மன நிம்மதியே உங்களுக்கு நீண்ட ஆயுளைத் தரும்! இப்படியாக தனது வார்த்தை யாலத்தையெல்லாம் பிரயோகித்தான் கோபாலன்.

"நீ சொல்லுறதெல்லாம் சரிதான். ஆனால்...." என்று இழுத்தான் பரந்தாமன்.

"பூமியில் பிறக்கின்ற எல்லோரும் நூறு வயதுவரை நலமாக வாழ்வோம் என்ற நம்பிக்கையில்தான் வாழ்கின்றோம். ஆனால், திடீரென நமக்கு ஏதாவது நோய் வருவதில்லையா? உதாரணத்துக்கு ஆகாய விமானத்தை ஒரு விஞ்ஞானி நம்பிக்கையோடுதான் கண்டுபிடித்தான்! அந்த விமானத்திற்கு விபத்து ஏற்பட்டால் என எதிர்மறைவாகச் சிந்தித்து பாரசூட்டைக் கண்டு பிடித்த விஞ்ஞானியை நாம் அமங்கலமாக யோசித்து பாரசூட்டையெல்லாம் கண்டுபிடித்திருக்கிறானே என எண்ணி பாரசூட்டைப் பாவிக்காமல் விட்டால் யாருக்கு நட்டம்?.

தனது பாரசூட் கதையை பரந்தாமன் ரசித்துக் கேட்பதை அவதானித்த கோபாலன், மேலும் தொடர்ந்தான் "எனக்குத் தெரிந்த ஒருவர் ஆரோக்கியமாகத்தான் இருந்தார். ஆனால் யாரும் எதிர்பாராத விதத்தில் ஓர் விபத்தில் இறந்து போனார்" என்று கோபாலான் கூற, "எதிர்பாராமல் நடப்பதுதான் விபத்து" என்று சிரித்தபடி கூறினான் பரந்தாமன்.

"சரியாய்ச் சொன்னாய். விபத்து என்பது உனக்கும் ஏற்படலாம்! எனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

GENERALI



**Mathan Selvaratnam**
**Versicherungs - und Vorsorgeberater**

Monbijoustrasse 29, 3001 Bern
058 473 24 45    058 473 32 29
email : mathan.selvaratnam@generali.com
www.generali.ch

www.generali.ch    076 / 303 22 16

## PRIVATKUNDEN & FIRMENKUNDEN | தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களிற்கும்

**வருமானக்காப்புறுதி**
**EINKOMMENS - VERSICHERUNGEN**
வேலை இழக்க நேரிட்டால் உங்கள் 100% வருமானத்தையும் பெற்றுக்கொள்ள இலகுவழி

**சேமிப்புக்காப்புறுதி**
**SPARVERSICHERUNGEN**
சிறுவர்கள் முதல் பெரியர்கள் வரை அனைவருக்குமானது

**ஆயுட்காப்புறுதி**
**LEBENSVERSICHERUNGEN**
உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்தை பாதுகாத்திட

**வாகனக்காப்புறுதி**
**FAHRZEUGEVERSICHERUNGEN**
உங்கள் வாகனத்திற்கு தேவையான அனைத்து காப்புறுதிகளும்

**வீட்டுக்காப்புறுதி**
**HAUSRAT, GEBÄUDE & HAFTPFLICHTVERSICHERUNGEN**
சொந்த, வாடகை வீடுகளிற்கு அவசியமான காப்புறுதி

**சட்டக்காப்புறுதி**
**RECHTSSCHUTZVERSICHERUNG**
ஒவ்வொரு சட்டம் சார்ந்த தேவைகளிற்கும் அவசியமானது

**மருத்துவக்காப்புறுதி**
**KRANKEN & UNFALLVERSICHRUNGEN**
அனைத்து விதமான மருத்தவ சேவைகளிற்கும் தேவையான சிறந்த காப்புறுதி



**வீட்டுக்கடன்**
**HYPOTHEKEN**
உங்கள் சொந்த வீட்டுக்கனவை நனவாக்கிட சிறந்த சேவை

எம்முடன் தொடர்பு கொண்டு தேவையான ஆலோசனைகளை இலவசமாக பெற்றுக்கொள்ளவும்

சுவிஸ் நாட்டில் அனைத்தின மக்களினதும் நம்பிக்கைக்குரியதும் இலாபம் தரவல்லதும் எமது நிறுவனம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படலாம்! விபத்து நடக்காமல் அவதானமாகவும் இருக்கவேண்டும்! அதேநேரம் விபத்து நடந்தால் என்ன செய்வது? என்பதிலும் முன்கூட்டியே அவதானமாக இருக்கவும் வேண்டும். கோபாலன் வீசிய பலவிதமான அம்புகள் பரந்தாமனின் மனதை மேலும், மேலும் அசைத்துப் பார்த்தன!

"என்னைக் கொஞ்சம் யோசிக்கவிடு! இன்னும் இரண்டு நாளில் என் முடிவைச் சொல்லுறன்" என்றுகூறி புன்னகைத்தான் பரந்தாமன்.

கோபாலனின் முகம் மலர்ந்தது. நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந்த நண்பர்கள் இன்று ஒன்றாகச் சாப்பிடுவோம் என்று சொல்லிக்கொண்டே கிளம்பினார்கள். ஒரு நொடி! வீதியைக் கடக்கும் போது இருவரும் கவனம் இழந்ததனால், எதிரில் வந்த ஒரு கார் பரந்தாமனை மோதவர... நண்பனைக் காப்பாற்றுவதற்காக கோபாலன் குறுக்கே வர... இருவரையும் மோதிவிட்டு கார் மறைந்துவிட்டது. இப்பொழுது இருவரும் வைத்தியமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில்....

பரந்தாமனுக்கு காலில் சிறிதான காயம்தான்! கோபாலனுக்கு தலையில் பலமான அடி! மூளைச்சாவு அடைந்து விட்டதாகவும், குணமடைய நீண்ட நாட்கள் ஆகலாம்! வைத்தியத்திற்கும் நிறையப் பணம் தேவைப்படும் எனவும் வைத்தியர்கள் சொன்னார்கள்.

மற்றவர்களுக்கெல்லாம் புத்திமதி சொல்லும் கோபாலன், தனக்கு எப்படியும் கூடிய தொகைக்குத் தன்னைக் காப்புறுதி செய்திருப்பான் என்றுதான் பரந்தாமன் நம்பியிருந்தான். ஆனால், கோபாலனோ "இப்ப எனக்கென்ன சாகிற வயசா? இன்னும் பத்து வருசம் கழிச்சுப் பாக்கலாம்" என்று சொல்லித் தன்னை காப்புறுதி செய்யாமலே இருந்து விட்டான்!" என்று அவன் மனைவி சொன்னதைக் கேட்டு வாய்பிளந்து நின்றான் பரந்தாமன்!.

"அறப்படிச்ச பல்லி தவறி கூழ்ப் பானைக்குள் விழுந்ததாம்" என யாரோ, எப்போதோ சொன்ன பழமொழி ஒன்று இப்பொழுது ஞாபகத்திற்கு வந்தது.

ஆசியா சமுத்திரம்
Asiatischer Supermarkt

**R.RAGUNATHAN**
Parkhofstrasse 101
41836 Hückelhoven
+ 49 24 33 / 44 69 007

**T. ANBALAGAN**
Sittardstrasse 21
41061 Mönchengladbach
+ 49 21 61 / 90 28 388

Lyca TV · VALUTRANS · Ria · MoneyGram · TEMPO

**IBAN : DE55 3907 0024 0474 1153 00 BIC : DEUT DE DB 390**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


நந்தவனம் சந்திரசேகரன்

# அடையாளத்தை உயிர்ப்பிக்கும் மாவீரர்கள் நாள்

“இந்த மண்ணிலேதான் எமது மாவீரர்கள் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தார்கள். இந்த மண்ணிலேதான் அவர்களது பாதச்சுவடுகள் பதிந்திருக்கின்றன, அவர்களது மூச்சுக்காற்றும் கலந்திருக்கிறது” என்று ஒரு மாவீரர் நாளில் தேசியத் தலைவர் முழக்கமிட்டிருக்கிறார்.

இன்றும் ஈழமண்ணில் மாவீரர்களின் மூச்சுக்காற்று உலவிக் கொண்டுதான் இருக்கிறது. இந்த மாவீரர்கள் மண்ணில் விதையாகப் பதியமிடப்பட்டு இருக்கிறார்கள். அவர்களின் படங்கள் வேண்டுமானால் அழிக்கப்படலாம், அவர்களின் வீர வரலாற்றை எதைக் கொண்டும் அழித்துவிட முடியாது.

உலகமே வியந்து பார்த்த 30 ஆண்டு கால போராட்டத்தையும், மாவீரர்களின் தியாகத்தை உலகம் உள்ளவரை பேசப்பட்டுக் கொண்டே தான் இருக்கும். இந்த நூற்றாண்டில் இப்படி ஒரு தலைவனை பார்க்கவில்லை என்ற வியப்புடனேயே, இன்னும் தேசியத் தலைவனின் தேவை தமிழ்ச் சமூகத்திற்கு தேவையாக இருக்கிறது.



இறுதியுத்தம் வரையில் ஒவ்வொரு மாவீரர் தினத்தன்று தேசிய தலைவரின் உரைக்காக உலகம் தனது காதுகளைக் கவனமாக திறந்துவைத்து, செவிமடுத்த தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரைகளில் எண்ணற்ற கருத்துகளையும், வழிகாட்டு நெறிமுறைகளையும் தமிழினத்திற்கு விட்டுச் சென்றிருக்கிறார். இன்று அவரது வழிகாட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நெறிமுறைகளைக் கடைபிடிக்கிறோமா? என்பது வேறு விடயம். ஆனால், மாவீரர் தினத்தில் அவரது உரைகளை நினைவுபடுத்திக் கொள்ளவாவது வேண்டும் என்பதில் நாம் உறுதிப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கிறோம்.

உயிர்த் தியாகம் செய்த மாவீரர்களின் நினைவைப் போற்றும் வகையில், மாவீரர் தினத்தில் அஞ்சலி செலுத்துவதன் மூலமே நம் இன உணர்வை தக்கவைத்துக் கொள்ள முடிகிறது. ஆனால், தமிழ் இனம் மட்டுமல்ல, தமிழ் இன உணர்வு கூட வரக்கூடாது என்று இலங்கை அரசு, மாவீரர் தின கொண்டாட்டத்திற்கு தடை விதித்து வருகிறது.

முள்ளிவாய்க்கால் இறுதி யுத்தத்திற்குப் பிறகு, ஒவ்வொரு ஆண்டும் மாவீரர் நாளை கொண்டாட கூடாது என்று இலங்கை ராணுவம் பல்வேறு இன்னல்களைச் செய்து வருகிறது. போர் முடிவுக்கு வந்துவிட்டது என்பது உண்மையானால், உயிர் தியாகம் செய்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்தத் தடை விதிப்பது ஏன்?. இன்னும் இன அழிப்பு நிகழ்வு நீடிக்கிறது என்பதற்கு சாட்சியாகவே இதைப் பார்க்க வேண்டியுள்ளது.

எந்தவிதமான தடைகளுக்கும் தமிழினம் அஞ்சப்போவதில்லை என்ற துணிவுடன், தடைகளைக் கடந்து, ஈழத்தில் மாவீரர் நாள் கொண்டாடப்படுகிறது. "எமது போராட்டத்தின் வலிமை, எமது போராளிகளின் நெஞ்சுரத்திலிருந்தே பிறக்கின்றது" என்று தேசிய தலைவரின் கூற்று இன்றும் என் மக்கள் நெஞ்சில் நிறுத்தி இருப்பதாலேயே இன்றைய சிங்கள அரசாங்கத்தின் பல்வேறு தடைகளை மீறி, 'மாவீரர் நாள்' கொண்டாடப்படுகிறது. தமிழினத்திற்கு வீரம் என்பது, வீரம் நிறைந்த தமிழ் மண்ணில் பிறப்பிலிருந்து உடன் பிறந்து விடுகிறது. ஆகையால் தான் 'வீரத்தமிழன்' என்று மார்தட்டிக் கொள்கிறோம்.

"ஒருவர் சத்தியத்திற்காக இறக்க வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தால், ஒரு சாதாரண மனிதன் கூட வரலாற்றைப் படைக்க முடியும்" என்ற தேசியத் தலைவரின் சத்தியவாக்கே உலக சரித்திர வரலாற்றில் நமது போராட்ட வரலாறு இடம்பிடித்திருக்கிறது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DORTMUND மாநகரத்திலே
தாயக மரக்கறிகள், பழவகைகள் மற்றும்
உணவுப் பொருட்கள் மொத்தமாக
பெற்றுக் கொள்ள நாடுங்கள்

StaR-Impex




பொருட்களை
ஜேர்மனியில்
மொத்தமாக
விநியோகம்
செய்யும்
ஒரே நிறுவனம்

Lebensmittel Grosshandel e.K.
Franziustr.150 (TOR 3) DE - 44147 Dortmund
Tel : 0231 / 8602696 Fax : 0231 / 8602698
email : info@star-impex.de
web : www.star-impex.net

Bringing Health to Life

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சூழ்ச்சிகளால் நம் இனம் அழிக்கப்பட்டிருக்கலாம். ஆனால், நமது வீரத்தை எந்த சக்தியாலும் அழித்துவிட முடியாது. நமக்கு நல்ல தலைவன் இருந்தார் என்பதே பெருமையான விடயம். இன்று ஈழ அரசியலிலும் சரி, தமிழக அரசியலிலும் சரி தேசிய தலைவர் தேவையாக இருக்கிறார்.

ஆனால், அவரது சித்தாந்தத்தைக் கடைபிடிக்கிறார்களா? என்பது பரிசீலனைக்குரியது. ஒருவரை முன்னிலைப் படுத்திக் கொள்வது சரியானது தான் என்றாலும், அவரது கொள்கைகளைக் கடைபிடிக்க வேண்டும் என்பதையும், தலைவனைக் கொண்டாடுபவர்கள் எண்ணிப்பார்க்க வேண்டும். வெறும் படத்தை மட்டும் வைத்துக்கொண்டு படம் கட்டும் வேலையைத் தவிர்த்துவிட்டு, கொள்கைப் பிடிப்புடன் தமிழினத்திற்கு வழி காட்ட முன்வர வேண்டும்.

ஏனென்றால், "நான் என் மக்களுக்காகப் போராடும் ஒரு போராளி" என்று தான் தேசிய தலைவர் தன்னை முன்னிலைப் படுத்தி இருக்கிறார். 'நான் இனத்தின் தலைவன்' என்று தன்னை அடையாளப் படுத்தவில்லை. அஞ்சலி செலுத்துவதால் மட்டுமே மாவீரர் நாளைக் கடந்து போவதில் அர்த்தமில்லை. எங்கிருந்தாலும் தேசியத்தலைவர் வகுத்துக் கொடுத்த வழிமுறைகளைக் கடைபிடிப்பதை, நமது கடமையாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

"பாதையைத் தேடாதே! அதை உருவாக்கு" என்ற கூற்றின் படி, நமக்கான பாதைகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. அப்பாதையின் வழியாக நமது அடையாளத்தை இழந்து விடாமல் இருப்பதே மாவீரர் தினத்தில் நமக்கான கொள்கைஉறுதியாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

தீபங்களாலும், மலர்களாலும் மாவீரர்களின் நினைவிடங்களை அலங்கரிப்பது போல, நம் 'தமிழினம்' என்ற அடையாளத்தையும் அலங்கரித்துக் கொள்வதே, உயிர் தியாகம் செய்த மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவது அர்த்தமுள்ளதாகும். ஏனென்றால், "மாவீரர்கள் காலத்தால் சாவதில்லை, அவர்கள் காலத்தை உருவாக்குபவர்கள்" என்ற தேசியத் தலைவரின் வார்த்தைக்கு உண்மையாய் இருப்போம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையும் எங்களின் ஏமாற்றுத் தலைவர்களும்

த.எதிர்மன்னசிங்கம்.

ஈழத் தமிழர்களின் தலை எழுத்தை, இலங்கைச் சிங்கள ஆட்சியாளர்கள் எழுதியதை விட, இந்தியா ஆட்சியாளர் எழுதியதுதான் வலியதும், முடிவுமானது என்பதே உண்மை. இப்படிச் சொல்வதை எந்த ஒரு தமிழ் அரசியல்வாதியோ அல்லது அரசியல் ஆய்வாளரோ ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். அவர்கள் இலங்கையின் அரசியல் வரலாற்றைப் படிக்காத வரை இந்த உண்மைகளை ஏற்க மாட்டார்கள்.

அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம் தொடக்கம், இராஜ வரோதயம், சம்பந்தன், மதியாபரணம், சமந்திரன் வரை எல்லாத் தலைவர்களும் ஈழத் தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பெற்றுத் தருவதற்காகக் கொழும்பு, சென்னை, பெங்களூர், புதுடில்லி, திம்பு, இலண்டன், ஸ்கொற்லாந்து, நியுயோர்க் என உலகின் தலை நகரங்களில் எல்லாம் ஓடி ஓடிப் பேசி விட்டு, முடிவில் ஒன்றுமே இல்லாமல் வெறுங் கையோடு திரும்பி வந்து, "மீண்டும் தேர்தல் மேடைகளில் ஏமாற்றப்பட்டு விட்டோம். ஆனாலும், தொடர்ந்து தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பெறப் போராடுவோம். எங்களுக்கே வாக்குப் போடுங்கள்" எனக் கெஞ்சுவார்கள், கூத்தாடுவார்கள். நீங்கள் வாக்கைப் போட்டாலும், போடாவிட்டாலும் தேர்தல் முடிவுகளை மாற்றி, தாமே மீண்டும் பதவிகளில் அமர்ந்து விடுவார்கள்.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அப்படித்தான் எங்கள் மக்களின் அரசியல் தலைமைகள் பதவியைப் பெற்றும், பெற உதவிய அரசுகளுக்கும் அமைப்புகளுக்கும் இசைவான அரசியலைச் செய்தார்கள், செய்கிறார்கள். இனிமேலும் செய்வார்கள். குறிப்பாக இலங்கை, இந்திய அரசுகளுக்கு ஆதரவான அரசியலை ஐ.நா. போன்ற சர்வதேச அரசியல் அரங்குகளில் செய்தும் வருகிறார்கள்.

அப்படியான அரசியலை நீலன் திருச்செல்வமும் அவரால் வெளிநாட்டு அமைச்சராகி, தமிழீழ விடுதலைப் புலிகளை உலக அரசுகளைத் தடைசெய்ய வைத்தார், லக்ஸ்மன கதிர்காமர் என்ற இனத் துரோகி. இந்த மகான் மட்டும் ஒரு தமிழனாக அவதாரம் செய்யா திருந்தால் ஈழத் தமிழின அழிப்பே நடந்திருக்காது.

நீலன் திருச்செல்வத்தின் தந்தை முருகேசு திருச்செல்வம் தருணம் பார்த்து தமிழரசுக் கட்சிக்குள் பின் வாசல் வழியாக வந்து, 1965ல் தமிழரசுக் கட்சி சார்பில் தமிழ் மக்களுக்கான மாகாண சபை ஆட்சியை பெற்றுத் தர டட்லி அமைச்சரவையில் உள்ளாட்சி அமைச்சராக இருந்தவர். கடைசிவரை தமிழ் மக்களுக்கான மாகாண சபை மசோதாவை நிறைவேற்றாமலே காலத்தை வீணடித்து, தமிழரின் அரசியல் அபிலாசைகள் மீது மண் போட்டு மூடிவிட்டுப் போனார்.

அவர் விட்ட மிச்சத்தைத் தொடர, அவர் மகன் நீலன் திருச்செல்வத்தை அப்பன் வழியில் தமிழரசுக் கட்சிக்குள் பின் வாசல் வழியாகக் கொண்டு வரப்பட்டார். அந்த நற்பணியைச் செய்தவர் சம்பந்தன் என்கிற செய்தியும் உண்டு. அதற்கு நன்றிக் கடனாக, நீலன் தேர்தலில் தோல்வி கண்டு, பதவி இழந்த சம்பந்தனை மீள நியமன உறுப்பினராக பின்வாசல் வழியாக வரவைத்தார் என்கிற செய்தியும் உண்டு. இதற்காக அன்றைய மூதூர் தொகுதி உறுப்பினர் தங்கத்துரை கொல்லப்பட்டார். அவரைக் கொன்றவர் யார்? யாருக்காக அவர் கொல்லப் பட்டார்? என்பதை ஒரு சிலரே அறிவர். ஒரு குற்றத்தால் அல்லது கொலையால் யார் பயன் அடைகிறார்களோ அவர்களுக்கும், அக்குற்றச் செயலில் ஏதோ தொடர்பு இருக்கும் என்பது பொதுவான வாதம். ஆனால், உறுதியான சாட்சியங்கள் இல்லாமல் ஊகங்கள் ஆதாரம் ஆகி விடா.


ஆனால், தமிழரசுக் கட்சியின் வரலாற்றில் இத்தகைய கொலைகள் அல்லது மரணங்களால் பதவிகளைப் பின் வாசல் வழியான நியமன உறுப்பினர்களாக அல்பிரட் துரையப்பா, தியாகராசா, சி.மோல் சிற்றம்பலம், சிவ மகாராசா, ரவிராஜ் போன்றவர்கள் கொலை செய்யப்பட்டதால் தமிழரசுக் கட்சி, தனது உறுப்பினர் தொகையை பெருக்கி, தமிழ் தேசியக் கூட்டமைப்பில் மிகப் பெரும் கட்சியாக அதிகாரம் செலுத்த முடிகிறது.

அப்படித்தான் சுமந்திரனும் இன்று தமிழ் மக்களின் ஏகத் தலைவராக வலம்வர முடிகிறது. அவரது தேர்தல் வெற்றிகளை யாரோ முடிவு செய்கிறார்கள். அவர்களின் முடிவுகளை தமிழ் மக்களின் தலைவிதியாக சுமந்திரன், சம்பந்தன் போன்றோர் செய்து கொடுக்கிறார்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அப்படித்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பும், 2 இலட்சம் வரையான தமிழ் மக்களும் வகை தொகை அற்றுப் படு கொலை செய்யப் பட்டனர். அதற்கான நீதி விசாரணையைக் கூட உலக நாடுகள் நடத்தி விடக் கூடாது என்கிற பெரும் பணியைச் சம்பந்தனும், சுமந்திரனும் தமது தலையாயப் பிறவிப் பயனாக செய்து வருகின்றனர். சுமந்திரனை மக்களா தேர்தல் அதிகாரிகளா தெரிவு செய்தனர்? என்கிற கேள்வி சென்ற தேர்தலைப் போல இந்த முறையும் எழுந்திருக்கிறது.

நீதி மன்றம் நீதியை வழங்குமா? வழங்க முடியுமா? என்பது ஆள்பவனுக்கே வெளிச்சம். ஆனால், தமிழரசுக் கட்சியின் தலைவரான மாவையார் தேர்தலில் தோற்று விட்டார் என்கிற நிலைமை, தமிழரசுக் கட்சியை ஊழ்வினை தண்டிக்கத் தொடங்கிவிட்டது என்கிற செய்தியைக் காலம் சொல்வதாக எடுக்கலாம். ஆனால், அப்பாவித் தமிழினத்தை 70 ஆண்டுகளாகப் பீடித்தப் பிணி அதற்கான பலனை அனுபவிக்கத் தொடங்கிவிட்டது என்கிற மன ஆறுதல் உண்டாவது தெரிகிறது.

இன்று தமிழ் மக்கள் தொடர்பான பேசுப் பொருளாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையைப் பிரித்தானிய அரசு நீக்க வேண்டும் எனப் பிரித்தானிய ஆணையம் கேட்டிருப்பது மிகத் தேவையான ஒரு செயற்பாடு. ஆனால், அதனைப் பிரித்தானிய அரசு செய்யக் கூடாது என்கிற கோரிக்கையை, இலங்கை-இந்திய அரசுகள் முன்வைத்திருப்பது ஆச்சரியம் தரும் ஒன்றாக அகரம் பார்க்கவில்லை.

ஏனென்றால், தொடக்கத்தில் இருந்தே எமது பார்வை சரியான ஒன்று என்பதை, எமது தீவிர வாசகர் அறிவர். அகரம் தனது பார்வையை எத்தனை துல்லியமாக வைத்துள்ளது என்பதற்கு எமது நவம்பர் 14, 2016 இதழ் ஆசிரியத் தலையங்கத்தைப் படித்துப் பாருங்கள். (இதழ் 5.07).

இன்றும் இலங்கை-இந்திய அரசுகள், ஈழத் தமிழ் மக்களை இராணுவ அடக்கு முறைக்குள் வைத்து, ஆட்சி செய்து, தமிழ் இன அழிப்பை நிரந்தரமான கட்டமைப்புக்குள் வைத்திருக்கவே விரும்புகின்றன. இந்த நாடுகளுக்கு எதிரான போர்க் குற்ற விசாரணைகளை முடக்கவே, தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைப் பயங்கரவாத இயக்கமாக வைத்திருக்க எத்தனிக்கின்றன.

இந்த இருநாடுகளும் இங்கிலாந்து அரசு, புலிகள் மீதான தடையை நீக்கக் கூடாது என நிர்ப்பந்திப்பதை நியாயப்படுத்தவே, யாழ்ப்பாணம், கிளிநொச்சிப் பகுதிகளில் யாரும் 2020ல் மாவீரர் நாளைக் கொண்டாடுவதை நீதிமன்றத் தடைகளின் மூலம் காவல் துறை முயற்சிக்கிறது.

இப்படியான ஜனநாயக செயற்பாடுகளைத் தடை செய்வதன் மூலம் அழிக்கப்பட்டு விட்ட புலிகள் அமைப்பை, இருப்பதாக உலகை ஏற்க வைத்து, தமிழின அழிப்பைத் தொடர்கின்றன. இவற்றுக்கு எல்லாம் தமிழர் தேசியக் கூட்டமைப்பும், ஏனைய தமிழ்க் குழுக்களும் மக்களின் குரலாகக் காண்பிக்கப் படுகின்றன.

இந்த உண்மைகளைத் தெரிந்து எப்படித் தமிழர் தரப்பு தனக்கான தமிழீழத் தாயகக் கனவை நனவாக்கப் போகிறது? புலம்பெயர் ஈழத் தமிழர் ஒன்றிணைந்து, திட்டமிட்டு வெற்றிப் படிகளைத் தொடுவாரா? காலம் பதில் சொல்லுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Radio - by - Phone

16 ஆம் ஆண்டில்...



ETR

ஐரோப்பிய தமிழ் வானொலி

00 4934 5483411998

தொலைபேசி இலக்கத்தில்

ஐரோப்பியத் தமிழ் வானொலி

நேரடி நிகழ்ச்சிகளில் பங்குபெற
அழையுங்கள்
00 49 231 700 977 60

அழையுங்கள்! வானொலியைக் கேட்டு மகிழுங்கள்..!!

மேலதிக விபரங்களுக்கு... www.etr.fm

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org